# கல்முனை வரலாறு



1868

எம்.எச்.ஏ. காதிர்

(ஓய்வு பெற்ற அதிபர்)

ஹாஜி மீரா முஹைதீன் பதிப்பகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தைக்கேணி மைதானம்

வீதி அபிவிருத்தி அதிகார சபை

பொலிஸ் நிலையம்

UC கல்முனை நகர சபை

DS கல்முனை பிரதேச செயலகம்

அரபிக் கல்லூரி

வைத்தியசாலை

தொடுவாய்கள்

பாடசாலை

பள்ளிவாசல்

இந்துக் கோயில்

பௌத்த கோயில்

கிறிஸ்தவ கோயில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்முனை வரலாறு

எம்.எச்.ஏ. காதிர்
(ஓய்வு பெற்ற அதிபர்)

ஹாஜி மீரா முஹைதீன் பதிப்பகம்
ஹனிபா வீதி,
கல்முனை - 05.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கல்முனை வரலாறு**
ஆசிரியர்: எம்.எச்.ஏ. காதிர்.
உரிமை: ஆசிரியருக்கு

வெளியிட்டோர்:
ஹாஜி மீராமொஹிதீன் பதிப்பகம்
ஹனிபா வீதி,
கல்முனை - 05.

அச்சிட்டோர்:
பறக்கத் கொம்பியூட்டர் சிஸ்டம்ஸ்
396, பிரதான வீதி, கல்முனை.
தொ.பேசி: 06723063

அட்டை ஓவியம்
ஏ.எம். பறக்கத்துல்லாஹ்.

முதல்பதிப்பு: 2000 ஜுலை
இரண்டாம் பதிப்பு: 2001 ஜுலை

Kalmunai History
By: M.H.A. Qadir
Copy wright reserved
ISBN 955 - 97501 - 0 - 0

**Published:**
Hadji Meera Mohideen Publications
Hanifa Road,
Kalmunai - 05

Drawing: A.M. Barakathullah

Printing : Barakathullah Computer Systems
396, Main Street, Kalmunai.
Phone: 06723063

Second Edition: 2001 July



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலைப்பற்றி:

பல வருடங்களாக நாம் எண்ணிய வரலாற்றுக் கோவையை உங்கள் முன் ஒரு சிறிய அளவில் வைத்துள்ளோம். இச்சிறிய அளவு இரண்டே இரண்டு கட்டுரைகளைக் கொண்டுள்ளது. படிப்படியாக ஏனைய பகுதிகளை வெளியிட முன்வந்துள்ளோம். அவற்றுக்கு உங்கள் அதரவு அவசியம்.

எமது கல்முனை நகரின் வரலாறு நீண்ட காலமாக எழுத்துருப்பெறவில்லை. சிறு சிறு மடல்கள் இதுபற்றி வெளி வந்துள்ளன. என்றாலும் அவை கையெழுத்துப் பிரதிகளாக விருந்து மறைந்து விட்டன. இப்போது அங்கொன்றும் இங்கொன்றுமாக சிதறிக் கிடக்கும் எமது வரலாற்றுத் தகவல்கள் மிகுந்த சிரமத்தின் மத்தியில் பொறுக்கியெடுக்க வேண்டியுள்ளது. கால வெள்ளத்தில் சிதைந்து போனவற்றின் எச்சங்களே அவைகள். அவைகளைத் திரட்டுவதில் அக்கறையுள்ளவர்கள் உதவி தேவைப்படுகின்றது.

இச்சிறு நூல் எமது வாழ்வில் நேரடியாக அனுபவித்த வைகள் பல பெரியார்களின் குறிப்புக்கள், சமகாலத்தில் வெளி வந்த நூல்கள், சில காலத்துக்கு முன் மறைந்த சில பெரியோர்களின் தகவல்கள், சமகாலத்து முதியோர்கள் வாய் வழித்துணுக்குகள் என்பவற்றைக் கொண்டு நடுநின்று ஆராய்ந்தவைகள் எழுதப் பட்டுள்ளன. இப்படியான முதல் விஞ்ஞானப் பட்டதாரியும், பல்கலைக்கழக விரிவுரையாளருமான இத்துறையில் எம்மை இறக்கி விட்ட முதற்பெருமை அல் - ஹாஜ். ஏ.எல்.எம்.ஏ. கபூர், நெதர்லாந்து அவர்களையே சாரும். இவரின் பின் எனக்கு பூரணமாக உதவிவரும் எனது இனிய சகோதரன் ஜனாப்: எஸ்.பி.எம். இப்றாஹீம் ஆசிரியர் அவர்களுக்கும் நன்றி சொல்லக் கடமைப் பட்டுள்ளேன். எனது இச்சிறு முயற்சியை அச்சுவாகனமேற்ற முழு மூச்சாக நின்று உதவிய எனது சகோதரன் முன்னாள் அதிபர் ஜனாப்: இஸற்.எம். பிச்சை (முஸ்தபா) அவர் களுக்கும் எமது நன்றி உரித்தாகுக. பொறுமையோடு திறமையாக அச்சிட்டு உதவிய எமதன்புக்குரிய இளவல் ஏ. முஹம்மட் பறக்கத்துல்லாஹ் அவர்களுக்கும் நன்றிகள் பல.

ஆசிரியர்.
2000.07.15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

கல்முனை நகரின் வரலாற்றுக் காலம் 1000 வருடங்கள் கொண்டுள்ளது. இதற்கு முன்னும் இப்பட்டினம் பயணிகள் தங்குமடமாக இருந்திருக்க வேண்டும். மரக்கலன்களில் இங்கு வந்த வெளிநாட்டவர்கள் இந்நகரில் தங்கி இலங்கையின் ஆதம் மலையை தரிசித்துச் சென்றதாக பல ஐதீகக் கதைகள் கூறுகின்றன.

இவ்வாறான வரலாற்றுச் சம்பவங்களை காலப்பகுதிகளைக் கொண்டு பெரும் பிரிவுகளாகவும் மனித வரலாற்று ரீதியான பாரம்பரியம், ஆட்சிமுறைமை, தொழில் சமய அநுட்டானம், கலாசாரம், இலக்கியம், சௌக்கியம் என்பவற்றைக் கொண்டு சிறு பிரிவுகளாகவும் வகுத்துக் கூறவுள்ளோம். இம்முறையின் அடியாக இந்நூலின் முதலாம் பதிப்பு அண்மைக்காலப்பிரிவில் அமைந்த வரலாற்றுப் பாரம்பரியம் அரசியல் நிருவாகம் எனும் சிறு பிரிவுகளைக் கொண்டுள்ளது. இதனையே பல காரணங்களால் இரண்டாம் பதிப்பாக வெளியிடுகின்றோம்.

இந்நூலின் இரண்டாம் பதிப்பு பல பிரதிகளைக் கொண்டிருப்பதோடு மேலதிக செலவினை ஏற்படுத்தி விட்டது. எனவே செலவின் ஏதுவாக விலை குறிக்க வேண்டி ஏற்பட்டது. வாசகர்கள் மன்னிப்பார்களாக! இதனோடு இந்நூலைப் பெற்று பயனடைவதோடு எமது அடுத்த பிரசுரங்களை ஊக்குவிக்குமாறு வேண்டுகின்றோம்.

இவ்விரண்டாம் பதிப்பு வெளிவர காத்திரமான பணிகளைச் செய்த ஜனாப். எம்.ஐ. ஜாபிர் ஆசிரியர், காஸிம் ஜீ ஆகியோருக்கும் தகவல் அளித்தோருக்கும் தகவல்கள் பெற உதவியோர்க்கும் எமது உளமார்ந்த நன்றிகள்.


ஆசிரியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளே...


| | பக்கஎண். |
|---|---|
| புவியியல் அமைவு | 01 |
| எல்லைகள் | 01 |
| பரப்பு | 01 |
| தரைத்தோற்றம் | 01 |
| குடிசனப் பரம்பல் | 05 |
| கடலரிப்பு | 07 |
| 1. சமூகப் பாரம்பரியமும் உறவும் | 07 |
| போடிமார் காலம் | 08 |
| முதலாளி வர்க்கத் தோற்றம் | 10 |
| நகைகள் | 12 |
| பொதுவான ஊர்த்தோற்றம் | 13 |
| சமூக உறவுகள் | 14 |
| பிரித்தாளும் கொள்கை. | 15 |
| சம்பவங்களின் தொகுப்பு | 16 |
| எம்.எஸ். காரியப்பரின் சாணக்கியம் | 17 |
| குயின்மேரி யுத்தக்கப்பல் நாசம் | 17 |
| ஆகாய விமானம் | 18 |
| சட்டி பெட்டி எடுத்த வருடம் | 18 |
| நெல் தானிய தடை முகாம் | 20 |
| இங்கினியாகலை சேனநாயகா சமுத்திரம் | 20 |
| கலவரக் கொலைகள் | 21 |
| மின்சாரப் பாவனை ஆரம்பம் | 21 |
| பூரண சூரிய கிரகணம் | 21 |
| புயலும் பெரு வெள்ளமும் | 22 |
| ஆயுதக் கலாச்சாரம். | 22 |
| 2. அரசியலும் நிருவாகமும் | 23 |
| தமிழரசுக் கட்சியின் தோற்றம் | 27 |
| ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தோற்றம் | 29 |
| நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை | 31 |
| முஸ்லிம் காங்கிரஸ் தோற்றம் | 33 |
| கல்முனை உள்ளூராட்சி | 35 |
| பட்டினசபைக்குச் சொந்தமான கட்டிடம் | 36 |
| இன ரீதியான பிரதேச செயலகம் | 41 |
| நிருவாகம் | 45 |
| மரைக்காயர் நிருவாகம் | 45 |
| அரச நிருவாகம் | 46 |
| உதவி அரசாங்க அதிபர் காரியாலயம் | 51 |
| கரையோர மாவட்டம் | 53 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புவியியல் அமைவு

எமது நகரம் இலங்கையின் தென்கிழக்குப் பிராந்திய மான அம்பாறை மாவட்டத்தின் வடக்கிலமைந்துள்ளது. இது வட அகலாங்கு 8ம் பாகை 24ம் கலைக்கும் 28ம் கலைக்கும் இடையிலும், கிழக்கு நெடுங்கோடு 81ம் பாகை 48ம் கலைக்கும் 50ம் கலைக்கும் இடையிலும் அமைந்துள்ளது.

### எல்லைகள்:

இதன் வடபுறத்தில் பாண்டிருப்புக் கிராமமும் (தாளவட்டவான் வீதி) தெற்கே சாய்ந்தமருதென்னும் கிராமமும், கிழக்கே வங்காள விரிகுடாவும், மேற்கே கடல் மட்டத்திலிருந்து 27 சென்றிமீற்றர் தாழ்வான வண்டல் நிலமும், மட்டக்களப்பு ஆறும், குளமும் காணப்படுகின்றன.

### பரப்பு:

வடக்குத் தெற்காக ஓடும் அக்கரைப்பற்று பிரதான வீதியினளவாக சுமார் நான்கு கிலோமீற்றர் நீளமுடையதாகவும், கிழக்கு மேற்காக சுமார் ஒன்றரைக்கிலோமீற்றர் அகல முடையதாகவும் காணப்படுகின்றது. இவற்றினளவாக இதன் பரப்பளவு சுமார் எட்டு சதுர கிலோமீற்றர் ஆகும்.

### தரைத்தோற்றம்:

இந்நகரின் தெற்கு வடக்காக ஓடும் கல்முனை அக்கரைப்பற்று பிரதான தார்ப்பாதை வடமேற்காக சரிந்து செல்வதைக் காணலாம். இப்பாதை இந்நகரின் மேற்குப் புறத்தில் செல்வதையும் அவ்விடம் தாழ்ந்தும் காணப்படுகின்றது. இத்தாழ்நிலம் தென்புறத்தில் குறுகியும் வடபுறத்தில் விரிந்தும் செல்கின்றது. இவ்விரிவு நகரின் மையப் பகுதியில் சந்தைக்கேணி எனுமிடத்தில் மிக விரிந்து குளம் போல் காட்சியளிக்கின்றது. மாரிகாலத்தில் இக்குளம் நீர்நிரம்பி முனையெனுமிடத்தின் வட தென் புறங்களில் காணப்படும் பெண்டுகத் தொடுவாய்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாழையடித் தொடுவாய் என்னுமிரு வடிகால்கள் மூலம் கடலில் வடிகின்றது.

இத்தாழ்நிலம் சந்தைக்கேணியிலிருந்து வடக்கு நோக்கி கல்முனைச் சந்தைப் பிரதேசம், வெஸ்லி உயர்தரப் பாடசாலை தாண்டி தாளவட்டவான் வீதிக்கு அப்பாலும் சென்று கல்லாற்றுக் "கோஸ்வே" வரைக்கும் ஒடுங்கியும் விரிந்தும் செல்கின்றது. இடையிடையே கடலோடு தொடர்புடைய தொடுவாய் களும் காணப்படுகின்றன. பிரதான பாதை யின் மேற்கில் ஆழமான குளங்கள் காணப்படுகின்றன. இத்தாழ் நிலப்பகுதியில் வெள்ள கால நீர்மட்டம் சுமார் 2மீற்றர் உயர முடையதாகும். பிரதான பாதையும் இடையிடையே வெள்ளத் துட்படும்.

இது தவிர நகரின் கிழக்கில் கடலிலிருந்து 50 மீற்றர் தூரத்திற்கு இப்பால் தாழ்வான நிலப்பகுதி வடக்குத் தெற்காக வும் கடலுக்குச் சமாந்திரமாகவும் நீண்டு காணப்படுகிறது. இதிலும் வெள்ள மட்டம் இரு மீற்றர் அளவாகக் காணப்பட்டது. இரு தாழ்நிலங்களுக்கு இடைப்பட்ட நிலமே மக்கள் குடியி ருக்க வாய்ப்பாக உள்ளது.

இன்று இத்தாழ்நிலங்களில் மண்ணிட்டு நிரப்பி கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. கல்முனை மக்கள் வங்கி, பஸ் நிலையம், கடைகள் என்பன இதற்குதாரணங்களாகும். இத்தாழ் நிலத்திலேயே கல்முனை பௌத்த விகாரையும் காணப்படுகி றது. பாதையின் மேற்குப்புறக் குளங்களும் கட்டிடங்களால் நிரம்பியுள்ளன. இவற்றுக்கு உதாரணமாக கல்முனை நூலகம், இலங்கை வங்கி, பாரிய காரியாலயத் தொகுதி, கல்முனைப் போக்குவரத்து பிரதான காரியாலயம், மிருக வைத்தியசாலை, கடைத்தொகுதிகள் என்பவற்றைக் குறிப்பிடலாம். மேலே குறிப்பிட்டவை இந்நகரின் புவியியல் சார்ந்த அம்சங்களாகும்.

இற்றைக்கு 50 வருடங்களுக்கு முன் இருந்த புவியியல் நிலை இன்று அருகிவருகின்றது. இன்னும் சில வருடங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறான அம்சங்களையும், பௌதீக நிலையையும் காண முடியாதிருக்கலாம். ஏனெனில், மக்கள் குடியிருப்பு நிலங்களும் பட்டினவிரிவாக்கமும் விரிவடைந்து வருகின்றன. இப்போதே இந்நகரின் கிழக்குத் தாழ்பூமிகள் தடந்தெரியாது அழிந்து விட்டன. மேற்கிலுள்ள குளங்களும் வயல்களும்தான் எஞ்சியுள் ளன. படிப்படியாக அவையும் மக்கட் செறிவுக்கு பலியாகலாம். இதனோடு நகரின் வடிகால் அமைப்பும் நகரின் சூழல் பரிகரிப் பும் சீரற்றுள்ளன. மலகூடங்கள் நிரம்பி நிலத்தடி நீரோட்டம் மாசுபடுத்தப்படுகின்றது. இவை நகராக்கத்தின் பாரிய விளைவு கள் எனலாம்.

இந்நகரத்தின் வடபுறம் கடல் மட்டத்திலிருந்து சராசரி ஒரு மீற்றர் உயரமான மேடான செம்பூரான் மண்ணும், தரையோ டமைந்த பாறைத் தொடர்களும் கொண்டதாக காணப்படு கின்றது. இவ்வட புறம் சுமார் மூன்று சதுரகிலோமீற்றர் பரப்புக் கொண்டதாகும். இப்பகுதியில் அரசாங்க காரியாலயங்கள், கிறிஸ்தவ கோயில்கள், கிறிஸ்தவ பாடசாலைகள், கல்முனை ஆஸ்பத்திரி என்பன காணப்படுகின்றன. இங்கு ஐதான சனச் செறிவு காணப்படுகின்றது.

தென்புறத்தில் கடல் மட்டத்திலிருந்து சராசரி அரை மீற்றர் உயரமான மணற்பாங்கான நிலமும், நிலத்தடி நீரூற்றுக்களும் காணப்படுகின்றன. இத்தென்புரம் சுமார் 3 சதுர கிலோமீற்றர் பரப்புடையதாகும். இப்பகுதியில் மிக அடர்த்தியான சனச்செறிவும், பத்துக்கு மேற்பட்ட மரூதிகளும் உள்ளன. இவற்றோடு ஓர் அரச மருத்துவ மனையும் உள்ளது. இது தற்போது கல்முனை தெற்கு ஆதார வைத்தியசாலையாக தரமுயர்த்தப்பட்டுள்ளது. இதன் பயன் அம்பாறை மாவட்டத்தில் தென் கிழக்குப் பிராந்திய மக்கள் சுகத்துக்கு பேருதவி புரிகிறது வைத்தியசாலை கல்முனையின் மிகப் பழைய பழைய சந்தை இருந்த இடத்தில் அமைந்துள்ளது. ஆங்கில வைத்திய முறை யான இவ்வைத்தியசாலையோடு ஆயுள்வேத வைத்திய முறையி லான மருந்தகம் ஒன்றும் காணப்படுகிறது. மேலும் இப்பகுதியைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சார்ந்து இரு பெரும் கல்லூரிகளும் அவற்றில் சுமார் 6000 மாணவர்கள் கல்வி கற்பதோடு 4 பாடசாலைகளும் இயங்குகின்றன. இந்நான்கு பாடசாலைகளிலும் சுமார் 5000 மாணவர்கள் கற்கின்றனர். இவற்றில் இரு பாடசாலைகளில் கல்விப் பொதுத்தராதர சாதாரண தரத்தில் வகுப்பில் உள்ளன. தவிர இவைகள் மகா வித்தியாலயங்களாகவும் காணப்படுகின்றன. இப்பகுதியில் கல்வியைத் தொடராது இடையில் நழுவியோர் தொகை சுமார் 4000 மாணவர்கள் உள்ளனர். இவர்கள் கூலி வேலைகளை செய்வோர்களாக காணப்படுகின்றனர். இவர்களை விட சுமார் 1500 மாணவர்கள் பிற ஊர் பாடசாலைகளில் கல்வி பயில்கின்றனர்.

நடுப்பகுதி கடல் மட்டத்திலிருந்து அரை மீற்றர் உயரமான மணற்பாங்கான நிலம், சுமார் இரு சதுர கிலோமீற்றர் பரப்பும் கொண்டது. இங்கு பரந்த அளவிலான சனச் செறிவு, ஆறு, கோயில்கள், ஒரு சிறிய கிறிஸ்தவ கோயில் ஒரு பௌத்த விகாரை, ஐந்து மசூதிகள், ஒரு சிங்கள மகா வித்தியாலயம், நகரசபை காரியாலயம் அதனோடு சேர்ந்த மண்டபம், பேரளவானவர்த்தக நிறுவனங்கள், பெரிய சந்தை, பஸ் நிலையம், பொலிஸ் நிலையம், வங்கிகள், நூல் நிலையம் என்பன காணப்படுகின்றன. இப்பகுதியில் மூன்று பாடசாலைகள் உள்ளன. இவற்றில் ஒன்று மகாவித்தியாலயத் தரத்தில் காணப்படுகிறது. இம்மூன்று பாடசாலைகளிலும் சுமார் 2000 மாணவர்கள் கல்வி பயில்கின்றனர்.

பொதுவாக இந்நகரத்தின் முப்பகுதிகளும் சேர்ந்த பரப்பு தென்கிழக்குப் பிராந்தியத்தின் தலைநகரம் போலவும் அவற்றுக்குத் தேவையான சகல அம்சங்களையும் கொண்டதாகக் காணப்படுகின்றது. சனநெருக்கமிகுந்த தென்பகுதி மக்களின் தொழில்களும், சொத்துக்களும் வடக்கு மத்திய பகுதிகளில் காணப்படுகின்றன. பொதுவாக தென் கிழக்குப் பிராந்தியத்தின் ஜீவநாடி யாக இந்நகரம் இயங்கி வந்துள்ளது.

இந்நகரம் நீர்வளமும், நிலவளமும் பெற்றுள்ளது. இடையிடையே மேற்கிலிருந்து வடிகால்கள் ஊடறுத்து கடலுள் செல்கின்றன. மேற்கிலுள்ள வண்டற்களி படிந்த பாரிய நிலப் பரப்பு நெற்செய்கைக்கு ஏற்றதாயுள்ளது. தற்போது கல்லோயா நீர்த்தேக்கத்தின் வடிநீர் தேங்கும் வாவியாகி விட்டதால் நெற்செய்கைக்கு உதவாத நிலமாக மாறிவிட்டது. பண்டைய காலத்தில் இந்நகரம் பெரும் வனப் பிரதேசமாகவும் பெரும் மரங்களடர்ந்த இடமாகவும் இருந்திருக்க வேண்டும். காரணம் முன்னொரு காலத்தில் மரவியாபாரத்துக்கு பேர்பெற்ற இடமாக இது இருந்ததாக போத்துக்கீஸர் ஆவணங்கள் கூறுகின்றன. இங்கு தென்னை, பனை, கமுகு செழித்து வளர்ந்திருந்தன. அத்தோடு மரக்கறித்தோட்டம், வெற்றிலை, மரவள்ளி என்பன இங்கு செய்கை பண்ணப்பட்டன. தற்போது இது ஓர் வர்த்தக மையமாகக் காணப்படுகின்றது. இந்நகரின் வடக்கு மத்திய பகுதிகளில் தாராளமான மரஞ்செடி கொடிகள் இன்றும் காணப்படுகின்றன. இதே நேரத்தில் தென்பகுதியில் குடிசன நெருக்கம் காரணமாக மரஞ்செடிகளற்ற பகுதியாக மாறி நகர அம்சம் பெற்றுள்ளது. இந்நகரம் கட்டிடங்களின் வளர்ச்சி காரணமாக இயற்கை எழிலான தாவரங்களை இழந்து வருகின்றது.

**குடிசனப் பரம்பல்:**

இருபதாம் நூற்றாண்டு ஐந்தாம் தசாப்தத்தில் 2961 முஸ்லிம் களும், 478 தமிழர்களும், 114 சிங்களவர்களும், பறங் கியர் களும் வாழ்ந்ததாக வரி அறவீட்டாளராகவிருந்த லோகல் போர்ட் உடையார் ஜனாப்: எம். கோஸ் முஹம்மது அஹமது லெவ்வை அவர்கள் கூறியுள்ளார்கள்.

இத்தொகை வருடாவருடம் பத்துசதம்வீதம் அதிகரித்து புதிய மிலேனியத்தில் முஸ்லிம்களின் தொகை இருபத்தே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூாயிரத்து அறுநூற்று அறுபத்தாறு (27,666) என்றும், ஆண் களின் தொகை பதிமூவாயிரத்து அறுநூற்று தொண்ணூறு (13,690) என்றும், பெண்களின் தொகை பதிமூவாயிரத்து தொழாயிரத்து எழுபத்தாறு (13,976) என்றும், தமிழர்களின் தொகை எட்டாயிரத்து எண்ணூற்று இருபத்தைந்து (8,825) என்றும், பறங்கியர் தொகை அறுநூற்று எழுபத்தொன்று (671) என்றும், சிங்களவர் தொகை இருநூற்று நாற்பது (240) எனவும் கல்முனைப் பிரதேசப் புள்ளிவிபரப்பகுதி ஆவணங்கள் கூறுகின் றன.

இங்கு வாழும் முஸ்லிம்களின் வரலாறே முக்கியமாகக் கொள்ளப்படுகின்றது. பொதுவாகக் கல்முனையில் முஸ்லிம் களின் கலாசாரப் பண்புகளே அதிகம் எனலாம். ஏனையோரின் கலாசாரப் பண்புகள் மிகக் குறைவாகவே காணப்படுகின்றன. முஸ்லிம்களே அதிகம் காணப்படுகின்றனர். அதிகமான சொத் துக்களும் முஸ்லிம்களுக்கே சொந்தமாக உள்ளன.

கல்முனையின் கிழக்கில் வங்காளவிரிகுடாவுள்ளது. வள்ளங்களின் போக்குவரத்துக்கு ஏற்றவிதமாக பல சிறு குடாக்கள் காணப்படுகின்றன. அவை அபிவிருத்தி செய்யப்பட் டால் வள்ளப் போக்குவரத்து தூர இடங்களிலிருந்து பொருளி றக்குமதி, மீன்பிடித்தல் அது தொடர்பான தொழிற்சாலைகள் உருவாக்கல் என்பவற்றுக்கு வாய்ப்புக்கள் ஏற்படும். இதனால் அநேகருக்கு தொழில் வாய்ப்புக்கள் கிடைக்கும். கடல் வர்த்தகத்திற்கும் வாய்ப்பிருக்குமென நம்பப் படுகின்றது. கடந்த நூற்றாண்டில் தென்னிலங்கையிலிருந்து வள்ளப் பேக்குவரத்து இருந்ததாகவும் இங்கிருந்து மாலைதீவுக்கும், இந்தியாவின் ம.்.பர் போன்ற கிழக்குத் துறைமுகங்களுக்கும் மக்கள் பயணித்து பொருள்கள் ஏற்றியிறக்குமதி செய்த தாகவும், அதன் மூலம் நேரடியான இந்தியக் கலாசாரத் தொடர்புகள் இங்கு ஏற்பட்டதாகவும் கூறப்படுகின்றது. சில காலங்களில் தரைப் பயணங்கள் தடைப்படும் போது கடல் மூலம் மக்கள் பொத்துவில்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டாளைச் சேனை போன்ற இடங்களிலிருந்து இங்கு வந்து சென்றதைக் காணக்கூடியதாக இருந்தது. கல்முனையில் "முனை" என்ற இடம் சகல வசதி கள் கொண்ட சிறு துறைமுகம் போல் காட்சியளிக்கின்றது. இதனை அபிவிருத்தி செய்தால் தொழில் வாய்ப்புக்கள் பெற்று இப்பிரதேசம் செழிப்புற வசதி ஏற்படும். கல்முனையை அண்டிய கடற்பரப்பில் முருகைக் கற்பாறைகள் காணப்படுகின்றன. இக்கடல் ஆழமானதாக இருந்தாலும் திட்டுத் திட்டாய் கடலடித்தள மேடைகள் காணப்படுகின்றன. இங்குள்ள மீனவர்கள் இம்மேடைகளை நன்கு அறிவர். இம்மேடைகளில் நிறைய மீன்கள் உண்டு.

இங்குள்ள மீன் வளத்தை நாடி இலங்கையின் தென் மாகாணத்திலுள்ள மாத்தறை, தெவுந்தரை, காலி போன்ற இடங்களிலுள்ள சிங்கள மீனவர்கள் வருகின்றனர். ஏராளமான மீன்களைப் பிடித்து கொழும்பு, கண்டி போன்ற இடங்களிலுள்ள சந்தைகளுக்கு அனுப்புகின்றனர். இவர்களிடம் நவீன மீன்பிடிச் சாதனங்களும் நல்ல பயிற்சியும் இருப்பதனால் இங்குள்ள மீனவர்களை விடக் கூடுதலான மீன்களைப் பிடித்து இலாப மடைகின்றனர். இங்குள்ள மீனவர்கள் இன்னும் மரபு முறையான தோணிவள்ளங்களை வைத்தே தொழில் புரிகின் றனர். போதிய பயிற்சியும் இவர்களிடமில்லை.

**கடலரிப்பு:**

கல்முனை வாடிவீட்டிலிருந்து காரைதீவுக்கு அப்பாலும் கரை யோரமாக ஒரு நீண்ட தார்ப்பாதை செல்கின்றது. இப்பாதையிலிருந்து 400மீற்றர் தூரத்திலிருந்த கடல் இன்று 25மீற்றர் தூரத்தில் உள்ளது. சில இடங்களில் 5மீற்றர் தூரத்திலும் காணப்படுகின்றது. பாதைக்கும் கடலுக்குமிடையி லிருந்த பாரிய தென்னந்தோட்டங்கள் முற்றாக அழிந்து விட்டன. இவை 1957ம் ஆண்டும் 1973ம் ஆண்டும் வீசிய சூராவளிகளினால் பாரிய தேசத்தை அடைந்திருந்தன. இப்போதுள்ள சுமார் 25 மீற்றர் தூரத்துக்கிடைப்பட்ட நிலம் இருப்பிட வசதியற்ற ஏழை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஸ்லிம்களின் வசிப்பிடங்களாக மாறிவிட்டன. அவர்களின் வீட்டுச் சுவரில் அலையடிக்கின்றது. இவை கடலரிப்பின் விளை வுகளாகும். இன்றும் கடலரிப்பு தொடர்கின்றது. இதனைத் தடைசெய்யும் நடவடிக்கைகள் இன்றுவரை எதுவுமில்லை.

## சமூகப் பாரம்பரியமும் உறவும்:

இருபதாம் நூற்றாண்டின் ஐம்பதுகளில் இனங் களிடையே அன்னியோன்ய உறவுகள் காணப்பட்டன. முஸ்லிம் களும், தமிழர்களும் ஒரு தாயின் வயிற்று இரு பிள்ளைகள் போன்று இருந்தனர். உண்மையும் அதுதான். முக்குவ குலத் தமிழ் பெண்ணரசிகளுக்கும் அரேபிய நாட்டுத் தோன்றல்களான ஆண் அரசர்களுக்கும்பிறந்த குழந்தைகளே முஸ்லிம்களாவர். இரு சமூகத்தவர்களின் சமயக் கலாசாரங்கள் வெவ்வேறாக இருந்த போதிலும் பாரம்பரியங்கள் ஒன்றாகவே இருந்தன இரு சமூகங்களும் தங்களிடமுள்ளதை கொண்டும், கொடுத்தும் வாழ்ந்துள்ளனர்.

பிரித்தானியரின் ஆட்சியின் அந்திமகாலம் இரண்டாம் உலகமகா யுத்தம் தென்கிழக்காசியாவையே உலுக்கிக் கொண்டிருந்த நேரம். அதுவரை இருந்து வந்த பாரம்பரியங்கள் மறையத்தொடங்கின. புதிய நவீன சாதனங்கள் மக்களிடையே புழக்கத்துக்கு வந்தன. இதனால் மக்கள் பழக்க வழக்கங்கள் நவீனம் பெறத் தொடங்கின. போக்குவரத்து, செய்தித் தொடர்பு, வெளியிடத் தொடர்புகள், உணவு, உடை, உறையுள் என்பவற் றில் மாற்றங்கள் ஆட்சி நிருவாக முறைகளில் புதிய அம்சங்கள் புகல், புதிய பொருட்கள் நுகர்வுக்குவரல் என்பன வற்றை குறிப்பிடத் தக்க அம்சங்களாகக் கொள்ளலாம்.

### போடிமார் காலம்:

இந்தத் தசாப்தத்தில் நவீனமயம் ஆரம்பிக்கப்பட்டாலும் பழைய பாரம்பரியங்கள் முற்றாக மறையவில்லை. இவை பற்றி விரிவாகச் சொல்லாவிட்டாலும், சுருக்கமாக அவை பற்றித்தரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றோம். பொதுவாகப் போடிமார் செல்வாக்கைக் குறிப்பிட லாம். போடிமார் கைகளில் பெரும்பாலும் ஊர் நிருவாகங்கள் இருந்தன. அவர்களின் தீர்ப்பே ஊரவர்களின் தீர்ப்பாக விருந்தது. ஊரின் அன்றாடத்தேவைகள் நிறைவேறப் பல்வேறு தொழிலா ளர்கள் ஆண்களிலும், பெண்களிலும் காணப்பட்டனர். குறிப்பாக எவரும் தொழிலற்று இருக்கவில்லை. எல்லோரும் உழைத்தே உண்டனர். பின்வரும் தொழிலாளர்களைக் கவனித்தால் இது நன்கு விளங்கும். ஆண்தொழிலாளர்களாக பட்டிக்காரன், முல்லைக்காரன், வயற்காரன், வண்டிக்காரன், விதைப்புக்காரன், வெட்டுக்காரன், சூடடிப்போன், பால்கறப் போன், கம்புவெட்டு வோன், கொள்ளிக்காரன், இறைச்சிக்காரன், வேட்டைக்காரன், தச்சன், மேசன், மரம் அறுப்பவன், கிடுகுக்காரன், பொட்டணி வியாபாரி, சில்லறைக் கடைக்காரன், ஆற்றுமீன்காரன், தட்டார், வண்ணார், பறையர், கொல்லன், கன்னாரர், நளவர், அம்மி பொழிபவன், அத்தாங்குக் காரன், கரப்புக்காரன், வீச்சுக்காரன், உரல்வெட்டி, பரிகாரி, சாத்திரி, சேனைக்காரன், வலைபின்னுபவன் என்பவர்களைக் குறிப்பிட லாம்.

பெண் தொழிலாளர்களாக அப்பக்காரி, அரசிக்காரி, அவல்காரி, வெற்றிலைக்காரி, நெல்குற்றுபவள், சுண்ணாம்புக் காரி, இலைக்கறிக்காரி, சட்டிபானைக்காரி, கொட்டிக்கிழங்கு, தாமரைக் கொட்டை கிழங்கு, குருத்து, முள்ளிக்காய், சுண்டங்காய், வட்டுக்காய் என்பன விற்பவள், பாய், உமல், பெட்டி, தட்டு, பன் என்பன விற்பவள், கதிரடிப்பவள் என்று இன்னும் எத்தனையோ தொழில்கள் புரிபவர்களைக் குறிப் பிடலாம்.

இவர்கள் அனைவரும் போடிமார்களின் செல்வாக்கின் தயவில் தொழில் புரிபவர்களாக இருந்தனர். காரணம், போடிமாரே கடைசிநேரக் காப்பாளர்களாகவிருந்தனர். அவர்களிடம் பணம், நெல், மந்தைகள் என்பன கணக்கில்லா திருந்தன. அவர்களின் வீட்டில் அட்டுவம், பட்டறைகள் என்பவற்றில் நெல் குவிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடக்கும். வருடக்கணக்காக இவர்களிடம் செல்வம் தேங்கிக் கிடக்கும். பட்டி பட்டியாக பசு, எருமை என்று தொகையான மாடுகள் இருக்கும். போடிமார்களிடம் எந்த நேரமும் தொழில் கிடைக்கும். போடிமாரைப் பகைப்பவர்கள் உண்ண உணவும், உடுக்கையும் அற்றுப்போக வேண்டிய நிலையிருந்தது. எனவே ஐம்பதுகளில் முன் போடிமார் காலம் எனலாம்.

**முதலாளி வர்க்கத் தோற்றம்:**

பிரித்தானியர் திருகோணமலை இயற்கைத் துறைமுகத் தைக் கடல் போக்குவரத்தில் முக்கிய தலமாக்கியபோது ஏராளமான சேவைத் தொழிலாளர்கள் தேவைப்பட்டனர். யுத்த காலத்திற்கு முன்பிருந்தே இந்நகர முஸ்லிம்கள் அங்கு வேலைக்குச் சேர்ந்தனர். சிலர் அங்கு கடைகளும் வைத்திருந் தனர். சேவையில் இருந்தோருக்கும், கடைகள் வைத்திருந்தோ ருக்கும் நல்ல பொருளாதார பலம் கிடைத்தது. யுத்த காலம் முடிந்தவுடன் அனேகமான பிரித்தானியர்கள் தாயகம் ஏகவே பலர் தொழில்களை இழந்தனர். கடைக்காரர்களும் கொழுத்த இலாபத்தை இழந்தனர். தொடர்ந்திருக்க முடியாமல் தாங்கள் தேடிய சொத்துக்களை எடுத்துக் கொண்டு சொந்த இடங்களுக் குச் சென்றனர். அப்படிவந்த இந்நகர முஸ்லிம்கள் பெரும் கடைகள், ஹோட்டல்கள் வைத்து வியாபாரஞ் செய்தனர். இவர் கள் வர்த்தகப் பிரமுகர்களாகவும், பெரும் தனவந்தர்களாகவும் மாறினர். இதனை முதலாளி வர்க்க ஆரம்பம் எனலாம்.

இம்முதலாளி வர்க்கப் பிரவேசத்தால் இதுவரையிருந்த போடிமார் செல்வாக்கு குறையத்தொடங்கியது. புதிய முதலாளி வர்க்கத்தின் தோற்றம் பாரம்பரியமாக நடந்துவந்த விவசயத் தொழிலை விட்டு வர்த்தகத்தில் மக்களை ஈர்த்தது. மக்கள் இதுவரை செல்லாத கொழும்பு, கண்டி போன்ற இடங்களுக்குச் செல்லத் தொடங்கினர். அங்கெல்லாம் வர்த்தகத் தொடர்பு ஏற்பட்டது. புதிய பொருட்களை கல்முனை மக்கள் நுகரத் தொடங்கினர். இங்கிருந்து நெல்லரிசி, கருவாடு என்பன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுப்பப்பட்டன. இதனோடு புதிய வாகனப் போக்குவரத்துகள் ஏற்படத் தொடங்கின.

இந்த மாற்றம் பாரம்பரியமான உடைகள்,உணவு, உறையுள் என்பவற்றில் மாற்றங்களை ஏற்படுத்தியது. வீடுகள் அமைப்பதிலும் நவீன பாணிகள் ஏற்பட்டன. புதிய மோஸ்த்தர் களில் வீடுகள் கட்டப்பட்டன. இதுவரை உபயோகத்தில் இல் லாத சீமெந்து பாவனைக்கு வந்தது.

நாற்பதுகளில் ஆண்கள் உடை முறைகள் சாறனும், சால்வையும், சிறுவாலும் அணிந்தனர். பெண்கள் பாவாடை, சட்டை எதுவுமில்லாத பதினாறு முழச்சே லையை மட்டும் கட்டி உடல் முழுவதையும் மறைத்துக் கொள்வர். சிறுவர்கள், சிறுமிகள் பெரும்பாலும் நிருவாணமாகவே காணப்படுவர். அரைஞாண் கயிறுடன் அரையில் வெள்ளியிலாலான அரை மூடி சிறுமியர்களுக்கும், குஞ்சுகுடி மாங்காய்ச் சலங்கை சிறுவர் களுக்கும் உடைகளாய் காணப்பட்டன. சில செல்வந்தர்களின் குழந்தைகள் நீண்ட சட்டை அணிந்திருப்பர். சாறனும் சேலையும் தடிப்பான சோமன்களாய் இருந்தன. இவை மருதமுனை, காத்தான்குடி குழித்தறியில் நெய்தவையாகும். ஐம்பதுகளின் ஆரம்பத்தில் ஏற்பட்ட பாரம்பரிய மாற்றம் உடையிலும் மாற்றத்தைக் கொண்டு வந்தது. இளைஞர்களும் யுவதிகளும் இலேசான சேலைகள் சாரன்கள் முதலியவற்றை அணியத் தொடங்கினர். அத்தோடு பாவாடை, மேற்சட்டை, பெனியன், சேர்ட் என்பன உபயோகத்திற்கு வந்தன.

போக்குவரத்திலிருந்த மாட்டுவண்டி, கூட்டுவண்டி என்பன மறைந்து பைசிகில்கள் புழக்கத்திற்கு வந்தன. போடிமார்களின் வில்லுக் கரத்தை வன்னியர்களின் பக்கிக் கரத்தை என்பன மறையத் தொடங்கின. இந்த இடத்தை சைக்கில், கார் என்பன இடம் பிடித்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாலாம் தசாப்தம் வரை கட்டப்பட்ட வீடுகள் களிமண்ணால் கட்டப்பட்டவை. கம்புகளை நட்டி அவற்றில் நாணல்புல் வரிச்சுச் செய்து களிமண்ணால் சுவர் ஆக்கப்பட்டது. கூரையும் கம்புகளாலும், கிடுகு, வைக்கோல் இலுக்குகளால் வேயப்பட்டிருந்தது. பெரும்பாலும் இரு அறைகளே வீட்டில் இருந்தன. திண்ணையும் காணப்பட்டது. அவ்வீடுகளில் தற்போதுள்ள வீட்டினுள் புகுவது போல் புக முடியாது. குனிந்தே செல்ல வேண்டும். அவ்வளவுக்கு கூரை மிகப் பணிவாயிருக்கும். அதைவிடப் பதிவாகச் சமையல் அறைகள் இருந்தன. வீட்டினுள் தற்போதுள்ளதுபோல் கதிரை, மேசை, கட்டில்கள் இருக்கவில்லை. அவற்றுக்குப் பதிலாக பாய்களே இருந்தன.

இவ்வீட்டினுள் பன்னால் இழைக்கப்பட்ட அசவு என்னும் பட்டிகள் இருந்தன. இவ்வசவுகளில் பாய்கள் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும். மற்றொரு அறையில் திருகாணியென்று சொல்லப்படும் மேடை மண்ணால் செய்யப்பட்டு அவற்றில் மண் பானைகள், சட்டிகள் என்பன அடுக்கப்பட்டிருக்கும். இருப்பது, படுப்பது எல்லாம் தரையில்தான் வீட்டினுள் வெண்கலப் பொருட்களான குத்துவிளக்கு, தூக்குவிளக்கு, செப்புக்குடம், மம வட்டா, சேவரக்கால், படிக்கம், தாழ்விளக்கு, செம்பு, வட்டில் என்பன போன்ற பொருட்கள் காணப்படும். உடைகள் வைப்பதற்கு தற்காலத்திலிருப்பது போல் அலுமாரிகள் இருக்கவில்லை. மரப் பெட்டிகள், தைலாப்பெட்டி, பெட்டகம், றங்குப் பெட்டிகள் போன்றவற்றில்தான் உடைகள் வேறு பெறுமதியான பொருட் கள் வைக்கப்படும். மற்றொரு அம்சம் இவ்வீடுகளுக்கு யன்னல்கள் கிடையாது. வீட்டின் சுவர் மட்டத்தில் விட்டங் களிடப்பட்டு பனையோலைப் பெட்டிகள், புற்பன் தட்டுகள், உமல்கள் என்பன அடுக்கப்பட்டிருக்கும். வீட்டினுள் காற் றோட்டம் இல்லாவிடினும் கோடை காலத்தில் குளிர்ச்சியாயும், மாரிகாலத்தில் மிதமான வெப்பமும் காணப்படும். அவ்வீடு களினுள் மண்தரையில் படுப்பதே ஒரு ஆனந்தமான விடயம் தான். வீட்டின் கூரையில் சுரைக் கொடி, நாடங்கொடி, பூசனிக் கொடி என்பன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படர்ந்திருக்கும். அக்கொடிகளில் பெரிய பெரிய காய்கள் காணப்படும். வெளியே இருந்து பார்ப்பதற்கு இவ்வீடுகள் செடிகள் படர்ந்த திடர்கள் போல் காணப்படும்.

**நகைகள்:**

பெண்களின் அணிகள் பெரும்பாலும் வெள்ளியினால் ஆனவை. நிறையிலும் கூடியவை. தலையில் நெற்றிமாலை கொண்டையில் கொண்டைக்குற்றி, கொண்டைமாலை, கொண்டைமூடி, மூக்கில மூக்குத்தி, மூக்குத்தி மின்னி, மூக்கு நடுச்சுவரில் தூக்கு, கழுத்தில் அட்டியல், சரடு, வைரமணி மாலை, பவள மணிமாலை, பூச்சுமணிமாலை, சௌக்கமணி மாலை, சங்கிலி மாலை, கொடி, பதக்கம் என்பன ஒன்றன்கீழ் ஒன்றாக தொங்கும். காதில் மேலிருந்து கீழ்வரை துளைத்து அல்லுக்குத்து, வாளி, தோடு, சிமிக்கி, காதுப்பூ, தூக்கணம், மின்னி என்பனவும், கையில் வளையல், முகப்பணி வளையல், சரிக்காப்பு, முறுக்குக் காப்பு, பட்டணத்துக்காப்பு, விடுகாப்பு, குழற்காப்பு, பூட்டுக்காப்பு, நெளிகாப்பு என்பனவும், விரலில் தொப்பி மோதிரம், முறுக்கு மோதிரம், அச்சு மோதிரம் இன்னும் பலவும் கைப்புயத்தில் தாவத்து, உள்கட்டு என்பனவும், காலில் தண்டை, கொலுசம், கறணை என்பனவும் கால் விரலில் மெட்டி விரல் மோதிரம் என்பனவும் சேர்த்து ஒரு பெண்ணில் சுமார் ஐந்து கிலோவிலிருந்து பத்துக் கிலோவரை வெள்ளியிருக்கும். தற்போது வெள்ளி நகையென்ற பேச்சுக்கே இடமில்லை.

**பொதுவான ஊர்த்தோற்றம்**

வளவைச் சுற்றி கம்புகள் நட்டி மாவிரைகள் இரண்டு வரிந்து கிடுகு, பனையோலை, கொத்து என்பவற்றால் மறைத்து பல வடிவங்களில் கிட்டிகள் வைத்துக் கட்டியிருப்பர். வேலி சுமார் ஏழடி உயரமுடையதாயிருக்கும். வேலிகளிலும் சாதாரண வேலி, தட்டுவேலி, முள்வேலி, சாத்துவேலி, ஓலை வேலி, வரிச்சுவேலி என பல வேலிகள் கட்டப்பட்டன. வளவுகளிலும், தெருக்களிலும் வேம்பு, சமண்டலை, பூவரசு மஞ்சுணா, வெல்லை மரம், தேத்தா,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிழை, வம்மி, முள் முருக்கை நெருப்புவாகை, மா, பலா, நறுவிழி, தென்னை, பனை, கமுகு, ஆசனிப்பலா, கொய்யா போன்ற மரங்கள் செழித்து வளர்ந்திருந்தன. இப்போது அவைகளில்லை. பட்டினவாக்கம், நகராக்கம் என்ற நவீனமயத்தில் அப்பசுமை மரங்கள் மறைந்து விட்டன.

இதற்கடிப்படையான மரபும் பசுமைக்குக் காரணமாய் இருந்தது. ஒரு போடியார் ஒருவருக்கு வேலை கொடுப்பதானால் அவரின் வீடு வளவைத்தான் முதலில் பார்ப்பார். அங்கு முருங்கை, ஆசனிப்பலா, பப்பாசி போன்ற மரங்களில்லாவிட் டால் அவருக்கு வேலை கொடுக்க மாட்டார். காரணம், உணவிற்கான கறி வகைகளை வெளியில் தேடாது காலடியில் கிடைக்கக் கூடியதாயிருக்க வேண்டும். இதனால் வேலை தடைப்படாது நடைபெறும் என்பதற்காகவாகும். இது மரபுமுறை யானது.

ஊரிலுள்ள வெட்டவளவுகள் குடியிருக்கும் வளவின் ஒருபகுதியில் மந்தைகள் அடைத்திருப்பர். இம்மந்தைகளின் சாணம் தெருக்களிலும், வளவுகளிலும் காணப்படும். அதிகாலையில் சாணநாற்றம் மூக்கைத் துளைக்கும். வேறு பூக்களின் மணமும் இதனோடு கலந்திருக்கும். ஊரில் மண் வீட்டைத் தவிர வேறு கல் வீட்டைக் காணமுடியாது. மிக அருமையாக சில போடிமார்கள் சுண்ணாம்பினாலும், சொறிக் கல் அல்லது செங்கல்லால் வீடு கட்டியிருப்பர். கூரை சிப்பி ஓடுகளால் வேயப்பட்டிருக்கும். இந்த வீட்டுக்கும் வடக்கிலொரு சன்னல் தெற்கில் ஒரு சன்னலாக இரு சன்னல்கள்தான் இருக்கும். எல்லா அறைகளுக்கும் சன்னல்கள் கிடையாது.

மந்தைகள் காலையில் மேய்ச்சலுக்குப்போய் மாலை யில் வீடுவரும்போது ஊர் முழுக்க புகைசுற்றும். இது மந்தைகளுக்கு நுளம்புகடிக்காதிருக்கவாகும். இவ்வாறான மரபுமுறைகள் பழக்கவழக்கங்கள் இன்று கிடையாது.

**சமூக உறவுகள்:**

மேலே கூறப்பட்ட மரபுவழக்கு தமிழ் சமுகத்திடமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்பட்டது. நவீன நாகரீக முறைகள் ஏற்படும்வரை முஸ்லிம்களும் தமிழர்களும் அண்ணன் தம்பி முறையாகப் பின்னிப்பிணைந்து வாழ்ந்தனர். அவரவர் சமயக் கலாச்சாரங் களைத் தேடி வாழ்ந்தனர். இவ்விடயத்தில் ஒருவருக்கொருவர் உதவியும் புரிந்தனர். இரு இனத்தவர்களும் சந்திக்கும் போது அன்போடு அளவளாவிக் கொள்வர். ஒருவருக்குத் தேவைப்படு பவற்றை மற்றவர் அன்போடு கொடுத்தனர். ஐம்பதுகளில் இது உச்சகட்டத்திலிருந்ததெனலாம்.

நாற்பதுகளிலிருந்த செல்லையா வன்னியனார், கிட்ணப் பிள்ளை உடையார் என்பவர்கள் தமிழர்களாயிருந்தும் முஸ்லிம்களை வேற்றுக் கண்ணோடு பார்க்கவில்லை. அவர்கள் பற்றி முஸ்லிம் வயோதிபர்கள் புகழ்ந்து கூறியதை எமது காதுகளால் கேட்டுள்ளோம். சிறந்த நிருவாகம், நேர்மை, தாராளத் தன்மை என்பவற்றைக் கொண்டிருந்த அவர்கள் இன்றும் பாராட்டப் படுகின்றனர். வேறு சில தமிழ் பெரியார் களும் சிறந்தவர்களாக விளங்கினர். இவர்களின் காலத்திலே அண்ணன் தம்பி சண்டைகள் போல சில சம்பவங்கள் நடை பெறத்தான் செய்தன. இருந்தும் இவை இனக்கண் ணோட்டத்தில் பார்க்கப்படவில்லை. காலையில் சண்டை மாலையில் உறவு என்ற நிலையில்தான் அவையிருந்தன. இவ்வுறவுகள் பற்றி ஒரு பெரிய நூலே எழுதி விடலாம். மேலே கூறியவை சில உதாரணங்களாகும்.

**பிரித்தாளும் கொள்கை:**

பிரித்தானியரின் பிரித்தாளும் கொள்கை காரணமாக நாட்டில் இன மோதல்கள் ஏற்பட்டன. இதன் விளைவாக பேரினவாதிகளில் கையோங்கி சிறுபான்மை இனங்கள் நசுக்கப்படுகின்றன. இந்நசுக்கல் கொள்ளையின் பாரிய விளைவே இன்று நாட்டின் பேரழிவுக்கு உந்து சக்தியாகும். இவற்றுக்கு உறுதுணை புரிந்தவர்கள் வடபுலத் தமிழர்கள் என்பதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவறில்லை. இவர்கள் கல்வியில் சிறந்தோங்கியிருந்தனர். பிரித்தானியரின் நிருவதக இயந்திரமாகவும் செயல்பட்டவர்கள். சுதந்திரத்திற்காகப் போராடி பேரினத்திற்கு ஆட்சியைக் கையளிக்கக் காலாகவிருந்தனர்.

அன்று புகழ்பெற்ற அரசியல்வாதிகளாயிருந்த அருணாசலம் பொன்னம்பலம், மஹாதேவா போன்ற பெரியார்கள் பிரித்தானியரிடமிருந்து சிறுபான்மையினரின் உரிமைகளைப் பெற்றிருக்கலாம். அதற்காய சாணக்கியம் அவர்களிடமிருந்தது. அதனைப் பெறாதது அவர்கள் செய்த தவறு. அதைவிடுத்து இன்று முஸ்லிம்கள் இருக்குமிடங்கள் வீடுகள் எங்கள் மண், எங்கள் வீடு என்பதில் எவ்வித நியாயமும் இல்லை. தவிர முஸ்லிம்களின் தாயும் தமிழ் பெண்மணிதான். தாயதி என்று கூறும்போது முஸ்லிம்களுக்கும் அதில் பங்குண்டு. தமிழர்கள் எவ்வளவு காலம் வாழ்ந்தார்களோ அவ்வளவு காலம் முஸ்லிம்களும் இங்கு வாழ்ந்துள்ளார்கள். மேலும் முஸ்லிம்கள் கஷ்டப்பட்டுத் தேடிய பணத்தில்தான் தமிழர்களிடமிருந்து இடங்களை வாங்கியுள்ளனர். அதனை உரிமைப்படுத்தி உறுதியெழுதிக் கொடுத்தவர்களும் தமிழ் நொத்தாரிசுகளே. இவ்வுண்மைகளை உணர்ந்து முஸ்லிம், தமிழ் உறவுக்கு வித்திடுவதே சாலச் சிறந்தது என இரு சமுகத்துப் பெரியார்களும் கூறியுள்ளனர். இக்கருத்தை முதன் முதலில் வெளியிட்ட பெரியார் திருவாளர் பொ.வி. கந்தையா நொத்தாரிசியேயாவார். அவர் ஓர் நேர்மை நிறைந்த மனிதர்.

**சம்பவங்களின் தொகுப்பு:**

இருபதாம் நூற்றாண்டு நாற்பதுகளில் செல்லையா வன்னியனாரின் பின் மட்டக்களப்புத் தென்பகுதியான அம்பாறை மாவட்டம் முழுக்க வன்னியனாக இராசவாசல் முதலியார் எம்.எஸ். காரியப்பர் வந்தார். இவரின் காலத்தி லேயே இரண்டாம் உலகமகா யுத்தம் ஆரம்பமாகியது. 1942ல் ஜப்பான், கொழும்பு, திருகோணமலை போன்ற இடங்களில் குண்டுகள் போட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்காலத்தில் யுத்தகால நடவடிக்கை களாக மக்கள் நீண்ட சதுரமாகக் குழிகள் வெட்டி அதனுள்ளே பதுங்கியிருந்தனர். இரவிலும் பகலிலும் இக்குழிகளிலேயே சில காலம் மக்கள் வாழ நேரிட்டது. இரவில் வெளியே வெளிச்சம் இராது இருளாகவே இருக்கும்.

**எம்.எஸ். காரியப்பரின் சாணக்கியம்:**

இக்காலகட்டத்தில் ஆங்கிலேய அதிகாரிகள் அரசாங்க அதிபர், வன்னியர்கள் ஆகியோரை இரவிலும், பகலிலும் கண்காணிப்பர். ஒருமுறை அப்படிவந்த ஆங்கில அதிகாரி கடற் கரைக்குவந்தபோது கடலில் நீண்ட தூரம் வரை இடையிடையே வெளிச்சங்கள் காணப்பட்டன. இவை யுத்தகாலத்தில் இருக்கக் கூடாதவை. இவற்றை ஏன் அனுமதித்தாய் என்று இவ்வதிகாரி காரியப்பரைக் கேட்டபோது, காரியப்பருக்கும் நிலைமை மிகப் பாரதூரமாகத் தெரிந்தது எனினும் சமயோசிதமாக கடற் பாதுகாப்புக்காக நான் நியமித்த வீரர்களின் வெளிச்சங்களே அவைகள் என்று கூறியதோடு இவ்வீரர்களுக்கு சம்பளம் கொடுக்க முடியாது திண்டாடுகிறேன் என்றும் கூறினார். இப்பதிலால் திருப்தி அடைந்த வெள்ளை அதிகாரி காரியப்பரை மெச்சியதோடு அவ்வீரருக்கான சம்பளத்துக்கு ஒரு பெருந் தொகையை ஒதுக்கிக் கொடுத்தார். ஒரு கல்லில் இரண்டு மாங்காய் அடிப்பதில் முதலியார் எம்.எஸ். காரியப்பர் சமர்த்தர்.

உண்மையில் நடந்தது இதுதான். கடலில் மீன் பிடித்த வர்கள்தான் அந்த வீரர்கள். அவர்கள் அடுத்தநாள் காலை சிவப்புச் சிறுவால்களுடனும், வெள்ளைச் சட்டையுடனும் வெள்ளைத்துரையின் முன் காட்சியளித்தனர். வீரர்களை கண் முன்னால் கண்ட துரை மகிழ்ந்து போனார். அதனால்தான் முதலியார் எம்.எஸ். காரியப்பருக்கு இராசவாச முதலியார் என்றகௌரவப் பட்டத்தைப் பெற்றார் எனக் கூறப்படுகின்றது இது 1941ல் நிகழ்ந்ததாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**குயின்மேரி யுத்தக் கப்பல் நாசம்:**

பிரித்தானியரின் பாரிய யுத்தக் கப்பல்கள் இரண்டு. ஒன்று குயின் எலிசபத், மற்றது குயின் மேரி. குயின் மேரி குயின் எலிசபத்தைவிட சற்றுச் சிறியது. இது 1942ல் வங்காள விரிகுடாவில் வைத்து ஜப்பான் குண்டினால் இரண்டாகப் பிளந்தது. இதில் ஒரு பகுதி அட்டாளைச்சேனைக் கடற்கரையி

லும் மற்றொன்று கல்முனை "முனை" என்னுமிடத்திலும் அடைந்தன. அந்நேரம் முதலியார் எம்.எஸ். காரியப்பர் முயற்சி யால் மீனவர் வள்ளங்கள் மூலம் வீரர்கள் காப்பாற்றப்பட்டனர். இந்நிகழ்வினால் இப்பகுதி மீனவர்கள் நிவாரணம் பெற்றனர். குயின் மேரியின் ஒரு பகுதி முனையின் ஒருபகுதிக் கடலில் இன்றும் காணப்படுகிறது. இக்கடல் பகுதிக்கு கப்பலடி என்றழைக் கின்றனர். இக்கப்பல் பகுதியில் ஏராளமான மீன்கள் பிடிக்கப் படுகின்றன.

**ஆகாயவிமானம்:**

1939ல் இப்பகுதியில் விமானம் ஒன்று முதன்முதலில் பறந்தது. விமானத்தை என்றும் காணாத மக்கள் வீடுகளை விட்டு வெளியேறி விமானப் புதினம் பார்த்தனர். இதனைச் சாக் காக வைத்து முதலியார் எம்.எஸ். காரியப்பர் விமானத்தைக் கண்டு சனங்கள் பயந்து வீடுகளை விட்டு வெளியேறி ஓடியத னால் பலவித நட்டங்களை அடைந்துள்ளனர். இவர்களுக்கு நிவாரணம் வழங்கி மீண்டும் குடியமர்த்த வேண்டும் என்று பிரித் தானியருக்கு அறிக்கை சமர்ப்பித்தார். இதனாலும் இந்நகர மக்கள் பயனடைந்தனர்.

**சட்டி, பெட்டி எடுத்த வருடம்:**

இது ஓர் கந்தூரிச் சம்பவமாகும். 1946ல் கல்முனைக் குடி முகைதீன் ஜும்ஆப் பள்ளிவாசலில் அன்றிலிருந்து இன்று வரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைபெறாத அதிசயமான கந்தூரி ஒன்று நடைபெற்றது. அந்நேரம் வன்னியராகவிருந்த இராசவாச முதலியார் எம்.எஸ். காரியப்பரின் அனுசரணையுடன் குறிச்சித் தலைமைக்காரர்கள் குடும்ப ரீதியாகப் பட்டியல் தயாரித்து அப்பட்டியலின் படி குடும்பத்தில் உள்ள ஒரு பிரதிநிதி சோற்றுக்குப் பெட்டியும் கறிக்குச் சட்டியுமாகப் பள்ளிவாசலுக்கு வந்து சோறும் கறியும் கொண்டு சென்றதாகும். இதனால் ஊரிலுள்ள ஒவ்வொரு குடும்பமும் கந்தூரிச் சோறும், கறியும் பெற்றது. அன்று கொடுபட்ட சோறும் கறியும் அன்று பகல், இரவு உணவுக்குப் போதுமானதாக இருந்தது. மக்கள் எல்லோரும் மகிழ்ச்சியோடு உண்டு மகிழ்ந்தனர். அதனை இன்றும் நினைவு கூருகின்றனர். ஏராள மான பிற ஊர்ச்சனங்களுக்கும் தாமரை இலைகளில் கந்தூரிச் சோறும், கறியும் கொடுபட்டதாக அறியக் கிடக்கிறது.

இக்கந்தூரியை ஒழுங்கு செய்து சமைத்துப் பகிர்ந்த வரையுள்ள பொறுப்புகள் யாவற்றையும் செய்ததோடு கந்தூரிக்குத் தேவையான பொருட்களில் பெரும்பங்கை வழங்கி நடத்திய பெருமை கலந்தர் மீராமுகைதீன் ஹாஜியாரைச் சேர்ந்ததாகும். இவர் 1924ஆம் ஆண்டில் மக்காவுக்கு ஹஜ்ஜுக்குச் சென்ற இப்பட்டின முதல் ஹாஜியாகும். அக்காலத்தில் போக்குவரத்து மிகக் கஷ்டமானது. அக்கால பயண வாகனங்கள் மாட்டு வண்டியும் கரிக்கோச்சும் பாய்க்கப்பலும் ஒட்டகமும்தான் இருந்துள்ளன. அதிகமாக கால்நடையாகவே பயணம் செய்ததாகக் கூறியுள்ளார். இவர் சிவப்பு, வெள்ளை கண்டாங்கிச் சாறனும் நீண்ட வெள்ளைச் சட்டையும், பச்சைச் சால்வையும் அணிந்து தலையில் துருக்கித் தொப்பியும் கட்கத்தில் குடையும், காலில் உயர்ந்த மிதியடியுடனும் ஓங்கியுயர்ந்த தோற்றத்துடன் நீண்ட வெண்ணிற தாடியுடனும் காணப்படுவார். ஊரின் நன்மையான பொது விடயங்களில் முன்னின்றுழைப்பார். நல்ல செல்வந்தர். கொடுக்கும் மனப்பாங்கு கொண்டவர். இவருக்கு ஆடம்பரக் கேளிக்கைகள் பிடிக்காது. கந்தூரி அன்று பின்னேரம் பள்ளிவாசலில் நடைபெற்ற வாணவேடிக்கைகளை வெறுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளிவாசல் நம்பிக்கையாளர்களையும், ஊரவர் களையும் கடுமையாகப்பேசி பள்ளிவாசலை விட்டு அகன்றதாக மக்கள் பேசிக் கொண்டனர்.

இதன் பிறகு 1948ஆம் ஆண்டிலும் ஒரு பாரிய கந்தூரி கொடுக்கப்பட்டது. இக்காந்தூரியில் ஹாஜியார் கலந்துகொள் ளவில்லை. இக்காலப் பிரிவில் பகைமைபூண்டிருந்த வழக்கறி ஞர் எம்.ஏ.எல். காரியப்பரையும், முதலியார் எம்.எஸ். காரியப் பரையும் ஒன்றிணைக்கும் விடயத்தில் ஹாஜியார் மிகவும் பாடுபட்டார். அவரின் முயற்சிக்கு அவர்கள் இடம் கொடுக்க வில்லை இதனால் இருவரையும் வெறுத்து அரசியலில் நின்றும் ஒதுங்கினார்.

**நெல் தானிய தடைமுகாம்:**

1949இல் தீவடங்கிலும் உணவுப் பஞ்சம் ஏற்பட்டது. வெளிநாட்டிலிருந்து அரிசி இறக்குமதி செய்ய அந்நியச் செலவாணி இருக்கவில்லை. நாட்டின் பெரும் விளைச்சலுள்ள அம்பாறை மாவட்டத்திலிருந்து அத்தனை நெல்லையும் ஒரு கட்டுப்பாட்டு விலைக்குப் பெற அரசு தீர்மானித்தது. அதனால் தடைமுகாம்கள் ஏற்பட்டன. இத்தடை முகாம்களுக்கு முன்னாள் கௌரவ கப்பல்துறை அமைச்சரின் தந்தை ஹுஸைன் விதானையார் அவர்கள் முக்கிய அதிகாரியாக இருந்தார்.

**இக்கினியாகலை சேனநாயகா சமுத்திரம்:**

1951ல் கல்லோயா ஆற்றை குறுக்காக அணைகட்டி நீர்த்தேக்க அமைப்பு வேலை ஆரம்பம். இவ்வேலைகளைச் செய்ய ஊரிலுள்ள பெருவாரியான ஆண்கள் சென்றனர். கல்முனை நகரத்தின் வர்த்தகம் விருத்தியுற்றது. இங்கினியாகல குளத்திட்ட தொழிலாளருக்கான பொருட்கள் இங்கிருந்தே சென்றன. கல்முனைச் சந்தையும் விருத்தியானது. இதனால் இந்நகர முஸ்லிம்களுக்கு பேரளவான வர்த்தக மூலத் தொழில்கள் கிடைத்தன. இதனால் விவசாய முயற்சிகளுக்கு ஆட்பஞ்சம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்பட்டது. இதனாலும் விவசாயம் பின்னடைவுற்றது. இந்த நீர்த்தேக்கத்தினால் பிற்காலத்தில் நல்ல செழிப்பான வண்டற் களி கொண்ட சுமார் 5,000 ஏக்கர் நெல் வயல்கள் குளமாயின. இக்குளத்திட்டத்தினால் வெறிச்சோடிக் கிடந்த இவ்வூரின் பிரதான பாதை சாதாரண மோட்டார் வாகனங் காளாலும், கனரக வாகனங்களாலும் நிரம்பி வழிந்தன. அன்று ஏற்பட்ட வாகனப் போக்குவரத்து இன்று பலமடங்கு பெருகிய வண்ணம் இருக்கின்றது.

**கலவரக் கொலைகள்:**

1952 டிசம்பர் 29ஆந் திகதியன்று இரு அரசியல் கோஸ்டிகள் மோதிக் கொண்டன. இம்மோதலில் கணக்கப்பிள்ளை என்ற செல்வாக்குள்ள பிரமுகர் முஹம்மது காசிம் அவர்களும் (இங்கு கல்வி அதிகாரியாகவிருந்த ஜனாப்: எம்.சீ. ஆதம்பாவா அவர்களின் தந்தை) இன்னொருவரும் கொலையுண்டனர். மேலும் பலர் காயங்களுக்குள்ளாகினர்.

**மின்சாரப் பாவனை ஆரம்பம்:**

இக்கலவர நிகழ்வின் பின் இரண்டு நாட்களில் கல்முனை நகரத்துக்கு மின்சாரம் கிடைத்தது. தெருவெங்கும் ஒளிவெள்ளம் பாய்ந்தது. சிலரின் வீடுகளும், நகரக் கடைகள் அரச காரியாலயங்களும் ஒளிபெறத் தொடங்கின.

**பூரண சூரிய கிரகணம்:**

1954இல் ஏற்பட்ட பூரண சூரிய கிரணத்தினால் சுமார் 3நிமிடங்களுக்கு பூரணமாக இலங்கைத் தீவே இருளில் மூழ்கியது. சேவல்கள் கூவின, பறவைகள் இரவில் இசைப்பது போல் இசையெழுப்பின சாதாரணமாகத் தெருவில் நடமாட முடியாதிருந்தது. அவ்வளவு இருட்டு. இவ்வாறான சூரிய கிரகணம் கடந்த 200 ஆண்டுகளுக்குள் நிகழவில்லை எனக் கூறுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**புயலும், பெருவெள்ளமும்:**

1957 டிசம்பர் 25ஆந் திகதியன்று கல்முனை நகரம் முதல் பல இடங்களும் வெள்ளத்திற்குட்பட்டன. கல்முனை அக்கரைப்பற்று பிரதான வீதியில் சுமார் 5அடி வெள்ளம் பாயந்தது. இப்பாதைவழியாக கடல் வள்ளங்களும், தோணிகளும் ஓடின. மக்களின் பல பொருட்கள் கால்நடைகள் யாவும் வெள்ளத்தில் மிதந்தன. கடலில் சுமார் 25அடி உயர அலைகள் தோன்றி கரை முழுவதையும் ஆக்கிரமித்துக் கொண்டன. ஊர் முழுக்க வெள்ளக் காடாகவே காட்சியளித்தது. பெரும்பாலான வீடுகள் வெள்ளத்துள் மூழ்கின. அதிலும் மண் வீடுகள் மண்ணைக் கவ்வின. மக்கள் எல்லோரும் பாடசாலை, பள்ளி வாசல்களில் குடியேறினர். இந்நகரில் இருந்த மரங்கள் நெற்பயிர்கள் என்பன அழிந்து. இந்நகர் பாலைவனமாகக் காட்சி யளித்தது. இதற்கடுத்து 1978 நவம்பர் 23ல் பாரிய புயல் ஒன்று வீசி வீடுகள், கட்டிடங்கள் என்பவற்றுக்குப் பாரிய சேதம் ஏற்பட்டது. முன்போல் மக்கள் பாடசாலைகள், பொதுக்கட்டிடங் களில் அகதிகளாய் குடியேறினர். மீண்டும் மரங்கள், பயிர்கள் பாரிய சேதத்திற்குட்பட்டன. இவ்விரு புயல் வெள்ளங்கள் கோடி கோடியான ரூபாய் நட்டங்களை பொது மக்களுக்கும் அரசுக்கும் ஏற்படுத்தின. அத்தோடு பலரின் மரணத்திற்கும் காலாய் இருந்தன.

**ஆயுதக் கலாச்சாரம்:**

இதனால் கல்முனை முஸ்லிம்களின் உயிர், பணம், பொருட்கள், உடமைகள் என்பன பறிக்கப்பட்டன. இவை 1985ல் இருந்து 1994ஆம் ஆண்டுவரை நடைபெற்ற பயங்கரச் சம்பவங்களாகும். பொதுவாக இலங்கை முஸ்லிம்கள் ஆயுத மேந்த வில்லை. எனினும் இன்று பரவலாக முஸ்லிம்கள் வாழ்ந்த இடங்களை விட்டு அவர்களை வெளியேற்றி அகதிகளாக் கப்பட்டமை புத்தி ஜீவிகள் முதல் சாதாரன பிரஜைகள் வரை உயிர் வதைக்கப் பட்டமை, சொத்துக்கள், செல்வங்கள் கொள்ளையிடப்பட்டமை, ஆட்கடத்தல் நடந்தமை போன்ற கொடுமைகளுக்கு முஸ்லிம்கள் ஆளாக்கப்பட்டுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தனைக்கும் முஸ்லிம்கள் சமா தானத்தையே விரும்பினர். விரும்பிக்கொண்டே இருக்கின்றனர்.

இதேபோன்று கல்முனை முஸ்லிம்களும் இம்சைக்குள்ளாகினர். கணவனையிழந்த பெண்கள் மக்களை இழந்த பெற்றோர்கள், பெற்றோர்களையிழந்த குழந்தைகள் என இன்னும் எத்தனையோ சொல்லலாம். இன்று இவர்கள் அனைவரும் வறுமைக்கோட்டுக்குள்ளாகியுள்ளனர். முஸ்லிம்கள் 1985க்கும் 1994க்குமிடையில் மிகக் கடுமையாகப்பாதிக்கப்பட்டுள்ளனர். கல்முனை முஸ்லிம்களும் பாதிக்கப்பட்டதில் குறைவே கிடையாது. கல்முனை ஓராம் குறிச்சி, இரண்டாம் குறிச்சியில் வாழ்ந்த முஸ்லிம்கள் அச்சுறுத்தப்பட்டு விரட்டப்பட்டனர். முன்னாள் முஸ்லிம்காங்கிரஸ் தலைவரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான ஜனாப்: எம்.எச்.எம். அஷ்ரப் அவர்களும் கல்முனையிலிருந்து விரட்டப்பட்டவர்தான். அவர் வாழ்ந்த வீடு இன்று சேதமாயுள்ளது. இதுபோன்ற கொடுமைகளை மறக்க முடியவில்லை. இச்சோக சம்பவங்கள் தொடர்ந்திருக்க வேண்டுமா?

02

## அரசியலும், நிருவாகமும்.

இருபதாம் நூற்றாண்டின் முன்னரைப் பகுதியில் சாதா ரண மக்களுக்குப் புரியாத ஆங்கிலேய ஆட்சி முறைமை சுதேசிகளான சிலருக்கு மிக விருப்பத்துக்குரியதாகவே இருந்தது. இவர்கள் ஐரோப்பாவுக்குச் சென்று அல்லது ஐரோப்பியர் முகாமைக்குக் கீழ் கல்வி கற்றவர்கள். ஐரோப்பிய ஆட்சி முறைமையை சிறந்த ஆட்சி என சிலாகித்தனர். ஐரோப்பியர் போலவே இவர்களும் காணப்பட்டனர். தங்கள் நாட்டின் பாரம்பரியம், கலாச்சாரம், பண்பாடு என்பவற்றில் கிஞ்சித்தும் இவர்கள் கவனம் செலுத்தவில்லை. சாதாரண மக்களோடு பழகவோ அம்மக்களை கைதூக்கி விடவோ முயலவில்லை. இவர்கள் இந்நாட்டு மக்களை மந்தைகளாகவே எண்ணினர். ஆரம்பத்தில் அந்நியர் சுதேசிகளை எவ்வாறு நடாத்தினரோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படியே இவர்களும் நடத்தினர். பிரித்தாளும் கொள்கை கொண்ட பிரித்தானியக் குருக்களைப் பின்பற்றி இப்பிரித் தாளும் சீடர்களும் நடந்து கொண்டனர். சிறுபான்மை, பெரும் பான்மை எண்ணக்கருக்களை மக்களிடையே விதைத்தனர். இன ஐக்கியத்தைச் சிதறடித்தனர். துவேசக் கருத்துக்களை மக்களி டையே பரப்பிரனர். இவ்விடயத்தில் பிரித்தானியரைவிட ஒரு படி மேலே சென்றனர். இதுவே இன்றைய சீரழிவுக்குக் காரணமாகும். இது கற்றறிந்த அரசியல் மேதைகளின் வியாபாரம் எனலாம்.

இந்நாட்டின் பொருளாதார வளம் குன்றிவிட்டது தொடர்ந்திருந்தால் முதலுக்கே மோசம் வரும் என்று எண்ணிய பிரித்தானியர் தங்கள் நாட்டு அரசியல் அமைப்பை இங்கு புகுத்தினர்[1]. 1889ஆம் ஆண்டு கோல்புருக் ஆணைக்குழுவின் சிபார்சுக்கிணங்க சட்டவாக்க சபை, சட்ட நிருபணசபை என இரு சபைகள் ஏற்படுத்தினர். சட்ட நிருபண சபையைத் தங்கள் கையில் வைத்துக் கொண்டு சட்டவாக்க சபைக்கு பிரதிநிதி களை தெரிவு செய்தனர். இந்தச் சபைக்கு முஸ்லிம்கள் சார்பில் கொழும்பில் அப்போதிருந்த இந்திய சூறத் மாநிலத்தைச் சேர்ந்த எம்.சீ. அப்துர் ரஹ்மான் அவர்கள் நியமிக்கப் பட்டார்கள் இந்தியச் சோனகர், இலங்கைச் சோனகர் என்ற வேற்றுமை காரணமாக அடுத்த சட்டவாக்க சபை பிரதிநிதியாக காத்தான்குடியைச் சேர்ந்த வழக்கறிஞரும் ஆலிமுமான ஜனாப் குப்பை தம்பி முஹம்மது சரீப் (*K.M.Sherif*) நியமிக்கப்பட்டார். எனினும் இவர் அப்பதவியில் ஒட்டியிருக்கவில்லை. அவர் அப்பதவியை இராஜினாமாச் செய்ததோடு தன் காத்தான்குடி மனைவியையும் விவாகரத்துச் செய்தார். பின்னர் சம்மாந்துறையில் மறுமணம் செய்தார். இவ்விவாகத்தின் மூலம் பிறந்த மகளை ஜனாப் ஏ.டபிள்யூ. காரியப்பர் விவாகம் செய்தார்.

இதன் பின் டொனமூர் ஆணைக்குழுவின் சிபார்சின் மூலம் பிரதேசவாரிப் பிரதிநிதித்துவ முறைமையும் அரசசபை யும் 1931ம் ஆண்டு நடைமுறைக்கு வந்தன. இப்பிரதேசவாரிப் பிரதிநிதித்

*1. ஜனாப். கே.எம்.எச். காலிதீன் "அம்பாறை மாவட்ட முஸ்லிம்கள்" 5ம் அத்தியாயம் அரசியல் வதனம் பார்க்க.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்தலில் முஸ்லிம் பிரதிநிதிகளை தெரிவு செய்யக் கூடிய இரு பிரதேசங்கள் மட்டும் இருந்தன. ஒன்று கொழும்பு மத்தியை உள்ளடக்கிய பிரதேசமும், மற்றது மட்டக்களப்புத் தெற்கு அம்பாறை மாவட்டத்தை உள்ளக்கிய பிரதேசமும் ஆகும். கொழும்பு மத்தியில் ஜனாப். ரீ.பி. ஜாயா அவர்கள் திரு ஏ. ஈ. குணசிங்கா அவர்களால் 5,203 வாக்குக ளால் தோல்வியுற்றார். மட்டக்களப்புத் தெற்கில் ஜனாப்: ஏ.எச். மாக்கார் அவர்களும், திரு. ஈ.ஆர். தம்பிமுத்து அவர்களும், ஜனாப் ஏ.கே. காரியப்பரும் போட்டியிட்டனர். இதில் கல்முனை வாசியானவரும் சிறந்த நுண்மதி படைத்தவருமான ஜனாப் ஏ.கே. காரியப்பர் அவர்கள் தங்களது வேட்பு மனுவை வாபஸ் பெற்றுக் கொண்டார். இத்தேர்தலில் ஜனாப் மாக்கார் அவர்கள் திரு. ஈ.ஆர். தம்பிமுத்துவை 2937 வாக்குகளால் வெற்றி பெற்றார்.

இத்தேர்தலில் ஏ.எச்.மாக்கார் அவர்களுடன் ஜனாப்: ஏ.கே. காரியப்பர் மட்டும் போட்டியிட்டிருந்தால் நிச்சயமாக ஜனாப்: ஏ.கே.காரியப்பர் அவர்கள் அரசசபை (*State Council*) யில் அங்கத்துவம் பெற்றிருப்பார். நல்ல செல்வாக்குள்ள மனிதர். இவர் ஊவா, கிழக்கு மாகாணங்களின் பிரசித்த நொத்தாரிசும் ஏறாவூர் குறுங்கால வன்னிமை முதலியாருமா வார். மேலும் பிரித்தானிய இலங்கைக் கவர்ணர்கள் ஒவ்வொரு ஐந்து வருடங்களுக் கொருமுறை மாகாணங்களுக்கு விஜயம் செய்வர். இவ்வாறு அவர்கள் கிழக்கிற்கு வரும்போது தொடராக மகஜர்களை பொது மக்கள் சார்பில் சமர்ப்பித்தார். இவர் சமர்ப்பித்த மகஜர்களில் நான்கு முக்கிய விடயங்களைக் குறிப்பிட்டிருந் தார். அவை

1. கல்லோயா ஆற்றை அணைகட்டி பட்டிப்பளை ஆற்றோடு திசை திருப்ப வேண்டும்.
2. ஒவ்வொரு விவசாயிற்கும் ஐந்து ஏக்கர் விவசாய நிலமும் மூன்று ஏக்கர் மேட்டு நிலமும் வழங்க வேண்டும்.
3. ஒவ்வொரு விவசாயிற்கும் ஒரு சோடி எருமைமாடுகள் வழங்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. ஒவ்வொரு கிராமத்திற்கும் தமிழ், ஆங்கிலம் கற்பிக்கக்கூடிய பாடசாலைகள் ஏற்படுத்த வேண்டும்.

இன்னும் பல அவர் குறிப்பிட்டிருந்தாலும் அவை பற்றிய விபரம் பெறமுடியாது போயிற்று.

இவர் வாழ்ந்த வீடு கல்முனை அக்கரைப்பற்று வீதியும், சாய்பு வீதியும் சந்திக்குமிடத்தின் தென்கிழக்கு மூலையில் அமைந்துள்ள முதலாவது வீடாகும். தற்போது இவ்வீடு தரைமட்டமாக்கப்பட்டுள்ளது. இவ்வீட்டில் பிரபல வழக்கறிஞரும் சிறந்த அறிஞருமான ஜனாப்: எம்.ஏ.எல். காரியப்பர் அவர்கள் வாழ்ந்து மறைந்தார்.

1931ஆம் ஆண்டின் பின் அரசசபை (*State Council*)யில் 1947ஆம் ஆண்டுவரை முஸ்லிம் பிரதிநிதிகள் எவரும் இடம்பெற வில்லை. 1936ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் சம்மாந் துறையைச் சேர்ந்த ஜனாப்: கே.எம். அப்துல் மஜீது வன்னியனார் அவர்களும், ஜனாப்: எம்.ஏ.எல். காரியப்பர் அவர் களும், திரு. எஸ்.ஓ. கனகரட்ணமும் போட்டியிட்டனர். இதில் திரு. எஸ்.ஓ. கனகரட்ணம் 5805 வாக்கு வித்தியாசத்தில் வெற்றிபெற்றார்.

இதன் பின் இரண்டாம் உலக யுத்தம் காரணமாக 1947ஆம் ஆண்டுவரை தேர்தல்கள் நடைபெறவில்லை. எனினும் 1943ல் புத்தள இடைத்தேர்தலில் ஜனாப்: எச்.எஸ். இஸ்மாயில் (சபாநாயகர்) அவர்கள் திரு. எம்.பீ. வன்னிநாயகாவினால் 545வாக்குகளால் தோல்வியுற்றார். 1947ல் தொகுதி ரீதியிலான பிரதிநிதித்துவ முறையும் பாராளு மன்றமும் ஏற்படுத்தப்பட்டன. இது சோல்பரி ஆணைக்குழுவின் சிபார்சில் விதந்துரைக்கப் பட்டவையாகும். இத்தேர்தல் 1947ல் நடந்தது. இவ்வாண்டிலி ருந்து மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து தென்கிழக்குப் பிராந் தியமான கல்முனைப் பிராந்தியம் (அம்பாறை மாவட்டம்) அரசி யல் பிணைப்பிலிருந்து விடுபட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தேர்தலில் கல்முனையைச் சேர்ந்த இராசவாசல் முதலியார் ஜனாப் எம்.எஸ். காரியப்பரும், ஜனாப். எம்.ஏ.எல். காரியப்பரும் மோதிக் கொண்டனர். இதில் எம்.எஸ். காரியப்பர் வெற்றி பெற்றார். வழக்கறிஞர் ஜனாப். எம்.ஏ.எல். காரியப்பர் சிறந்த அறிஞரும் மட்டக்களப்பு நகரசபை முதல்வருமாவார். இராசவாசல் முதலியார் ஜனாப்: எம்.எஸ். காரியப்பர் சிறந்த அரசியல்வாதியும், இலங்கை வரலாற்றை அறிந்தவரும், ஆங்கிலப்புலமையும் கொண்டவராவார். இவரது ஆங்கிலச் சொல்லாட்சி பல அறிஞர்களையே மயங்க வைத்ததுண்டு இவரது கடிதங்களைப் படிக்க ஆங்கில அகராதியைப் புரட்டிய பல அரசாங்க அதிபர்கள் இருந்துள்ளனர். இவர் ஓர் ஆங்கில மொழி ஞானியாவார்.

தென்கிழக்குப் பிராந்திய அரசியல் தலைவிதியை நிர்ணயிக்கும் பலம் கல்முனை சார்ந்த அரசியல் வாதிகளின் கைகளிலேயே இருந்துள்ளது. பெரிய நொத்தாசியார் என்றழைக்கப்பட்ட ஜனாப்: ஏ.கே. காரியப்பர் அவர்களின் தூரதிருஷ்டியால் முழு இலங்கைக்குமான முஸ்லிம் பிரதிநிதித்துவம் 1931ஆம் ஆண்டில் கிடைத்தது. அதற்குப் பின்வந்தவர்களின் பலவீனம் காரணமாக 1947ஆம் ஆண்டுவரை முஸ்லிம் பிரதிநிதித்துவமே இல்லாதொழிந்தது. இதுவும் கல்முனை சார்ந்த அரசியல்வாதிகளின் கைங்கர்யம் என்பதில் தவறில்லை. இதனையடுத்து 1951ஆம் ஆண்டு கடைசியில் நடைபெற்ற தேர்தலில் ஜனாப்: எம்.எஸ். காரியப்பர் தோல்வியுற்றார். இதில் ஜனாப்: கே.எம். அப்துல் மஜீத் வன்னியனார் அவர்களின் மகன் மேர்ஷா என்பவர் வெற்றிபெற்றார். இவரின் சாணக்கியமற்ற பிரதிநிதித்துவத்தால் கல்லோயாக்குடியேற்றத்தில் முஸ்லிம்களுக்குக் கிடைக்கவிருந்த நன்மைகள் இல்லாதொழிந்தது.

**தமிழரசுக் கட்சியின் தோற்றம்.**

1955ஆம் ஆண்டில் பெரும்பான்மையினத்தின் இன நசுக்கல் கொள்கைகளால் திரு எஸ்.ஜே.வீ. செல்வநாயகம் அவர்களின் தலைமையில் இலங்கை தமிழ் காங்கிரஸிலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிந்து தமிழ் சமஷ்டிக்கட்சியை ஆரம்பித்தனர். இக்கட்சி கிழக்கு மாகாணங்களில் தமிழரசுக்கட்சி என்று பிரகடனப்படுத் தப்பட்டது. அடுத்து இக்கட்சி சத்தியாக் கிரகங்களை முதலில் காலிமுகத் திடலிலும் பின்னர் வடக்கு - கிழக்கு மாகாணங் களிலும் நடத்தியது. இது கல்முனையிலும் நடை பெற்றது. இதன் காரணமாக அடக்குமுறைகளும், வன்செயல்களும் நாடு தழுவிய அளவில் கட்டவிழ்த்து விடப்பட்டன. முஸ்லிம்களும் தாங்கள் ஓர் இனம் என்பதை மறந்து தமிழரசுக் கட்சிக் காதரவாக உழைத்தனர். இது வடகிழக்குமாகாணங்களில் மட்டும்தான். இலங்கையின் ஏனைய பிரதேச முஸ்லிம்கள் இதில் பங்குபற்றவில்லை என்றாலும் கொள்கை ரீதியாக ஆதரவு தெரிவித்தனர். வன்முறைக்குட்பட்ட தமிழர்க்குத் தங்கள் வீடுகளில் வைத்துப் பாதுகாப்பளித்தனர்.

இந்நிலையில் 1956ல் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்த லில் இராசவாசல் முதலியார் ஜனாப்: எம்.எஸ். காரியப்பரும், அவர் மருகர் சட்டத்தரணி ஜனாப்: எம்.எம்.முஸ்தபா அவர்க ளும் தமிழரசுக்கட்சி சின்னத்தில் வேட்புமனுக்களை சமர்ப்பித் தனர். இருவரும் இதில் வெற்றியும் பெற்றனர். பின் தமிழரசுக் கட்சித் தலைமைப்பீடத்திற்கும் காரியப்பர், முஸ்தபா ஆகியோ ருக்குமிடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் மனமுறிவு ஏற்பட்டிருக்க வேண்டும். இம்மனமுறிவுக்குரிய காரணங்கள் இதுவரை தெளிவாகவில்லை. இருவரும் அக்கட்சியை விட்டு பிரிந்தனர். இப்பரிவு இரு சமுகங்களுக்குமிடையில் மனக் கசப்பை ஏற்படுத்தியது.

இதே காலப்பிரிவில் சம்மாந்துறையைச் சேர்ந்த எம்.அப்துல் மஜீது (B.A) அவர்கள் கல்முனைத் தொகுதியில் மரச்சின்னத்தில் சுயேச்சையாக வேட்புமனு சமர்ப்பித்திருந்தார். இவரை ஆதரித்து கல்முனையைச் சேர்ந்த மூன்று முஸ்லிம்கள் தங்கள் சுயலாபங்கருதி கல்முனையிலிருந்து பெருவாரியான வாக்குகளைப் பெறலாம் என்று ஆசைவார்த்தைகளைக் கூறி யுள்ளனர். இவ்வார்த்தையைப் பெரிதாக நம்பிய ஜனாப்: எம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்துல் மஜீது (B.A) அவர்கள் கடைசியில் தேல்வியுற்றார். இவ்வார்த்தையின் யதார்த்தம் பற்றி அவர் ஆராய்ந்திருக்காத தன் காரணமாக ஏமார்ந்து விட்டார். இதனால் ஆத்திரமுற்ற மஜீத் அவர்களும், அவரது மாமனார் பொறியியலாளர் எம்.எம். இஸ்மாயில் அவர்களும் கல்முனை மக்களின் வளங்கொழித்த சுமார் 5000 ஏக்கர் நிலத்தை கல்லோயாக்குளத்தின் வடிநீர் தேங்கும் வாவியாக்கி விட்டனர். இன்றும் இந்நிலம் விவசாயம் செய்ய முடியாத கடலாக காட்சியளிக்கின்றது. இது கல்முனை மக்களின் வயிற்றில் விழுந்த பாரிய அடியாகும். பொறியியலா ளர் இஸ்மாயில் அவர்கள் அப்போது கல்லோயா அபிவிருத்தி சபையின் பிரதம பொறியியலாளராகவிருந்தார் என்பது குறிப்ப டத்தக்கது.

ஆகப்போக 1956ல் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்த லின் மூலம் கல்முனை முஸ்லிம் மக்கள் இரு வழிகளில் பாதிப் புக்குள்ளாகினர். முதலாவது தமிழ் முஸ்லிம் உறவில் விரிசல். இரண்டாவது. கல்முனை மக்களின் உணவுப் பிரச்சினையை ஈடு செய்துவந்த பாரிய நிலப்பரப்பு பாழ்பட்டமை. இது கல்முனையில் நடைபெற்ற வேண்டாத அரசியல் பலன்களா கும்.

**ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தோற்றம்.**

1951 மார்ச் 2ல் ஆளும்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து பிரிந்து ஸ்ரீ லங்கா சுத்திரக் கட்சியை திரு. எஸ். டபிள்யூ. ஆர். டீ. பண்டாரநாயகா அவர்கள் ஆரம்பித்தார்கள். 1956ம் ஆண்டுத் தேர்தலில் இக்கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனம் அரசாங்க ஆட்சி மொழியாயிருந்த ஆங்கிலத்தை நீக்கி பெரும் பான்மை பேசும் மொழியான சிங்கள மொழியை அரசாங்க மொழியாக்குவோம் என்று வெளியிடப்பட்டது. இதனை நூற் றுக்கு நூறு வீதம் ஆதரித்த பெரும்பான்மை மக்கள் அக்கட் சியை ஆட்சி பீடமேற்றினர். இது வெடிமருந்துக் கிடங்கில் தீ வைத்தது போலிருந்தது. சிறுபான்மைத் தமிழர்களும், முஸ்லிம் களும் சிங்களம் படிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது தமிழ் மொழிக்கு எவ்வித



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தஸ்த்தும் இல்லாது போயிற்று. சிங்களம் தெரியாத அனேக அரச ஊழியர்கள் வேலையை இழக்க அல்லது சிங்களம் படிக்க வேண்டி ஏற்பட்டது. இந்நிலை தமிழ் பேசும் மக்களின் உரிமைகளில் பாரிய அடியாய் விழுந்தது. இதனால் தமிழ் மக்கள் தொடர்ச்சியான போராட்டங்களில் இறங்கினர் இப்போராட்டங்களின் முடிவு ஆயுதப்போராட் மாயுள்ளது.

தேசியரீதியில் 1956ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தல் தேசிய இனங்களுக்கிடையில் இன உணர்வுகளையும் வன்செயல்களயும் தூண்டி விட்டது எனலாம். இதற்கெல்லாம் அடிப்படை காரணஸ்தர்கள் ஆங்கிலேயர்களேயாகும். பிரித்தானியர்கள் இந்நாட்டிற்கு சுதந்திரம் கொடுத்தபோது ஜனநாயகம் என்ற பெயரில் இன வெறிகளையும் இடையறாத போராட்டங்களையும் வைத்துப் பார்வைக்கு அழகான கொள்கையால் சுற்றி பொதியாக்கி தங்களால் பயிற்றுவிக்கப்பட்ட அரசியல் சூதாட்டக்காரர்களின் கைகளில் கொடுத்துச் சென்றுவிட்டனர். உண்மையில் காலங்கடந்த பின்பே அந்தப் பொதிக்குள் இருந்தது என்னவென்று தெரிந்தது. இதனையறிந்த சில தேசிய வாதிகள் கூக்குரலிட்டனர்தான் எனினும் காலங்கடந்த முயற்சி யாகிவிட்டது. சில நல்லவர்களினால் சீரடையும் என்ற நப்பாசையும் இருக்கத்தான் செய்கின்றது எதிர்காலம் எப்படியோ?

1960ம் ஆண்டு தேர்தலில் கல்முனைத் தொகுதியில் எம்.எஸ்.காரியப்பர் அவர்கள் வெற்றிபெற்றார். போதிய வாக்குப் பலம் இல்லாது பாராளுமன்றம் கலைந்தது. இதே ஆண்டில் மீண்டும் தேர்தல் நடைபெற்றது. இதிலும் எம்.எஸ். காரியப்பரே வென்றார். இத்தேர்தலில் எம்.எஸ். காரியப்பரின் சகோதரியின் மகன் ஜனாப். எம்.சி. அஹமது அவர்கள் சுயேச்சையாக சேவல் சின்னத்தில் போட்டியிட்டார். இதிலிவர் தோல்வியுற்றாலும் பின்னர் எம்.எஸ். காரியப்பரின் வீழ்ச்சிக்குக் காலாகவிருந்தார். 1965இல் நடைபெற்ற தேர்தலில் ஜனாப்: எம்.எஸ் காரியப்பர் வென்றாலும் இலஞ்ச ஆணைக்குழுவின் தீர்ப்புக்கு இணங்க ஐக்கிய தேசிய கட்சி அரசின் பிரேரணையினால் பாராளுமன்றப்பதவியையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழுவருட குடியுரிமையும் 1968ம் ஆண்டில் இழந்தார். இவ்வாண்டு நடைபெற்ற கல்முனை இடைத்தேர்தலில் ஜனாப் எம்.சி. அஹமது அவர்கள் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் சின்னத்தில் வெற்றி பெற்றார்.

இதன் பின்னர் 1972இல் நடைபெற்ற தேர்தலில் ஜனாப் எம்.சி. அஹமது அவர்கள் ஸ்ரீ லங்கா சுத்திரக் கட்சியின் கைச்சின்னத்தில் அமோக வெற்றி பெற்றார். பெரும்பாலான வாக்குப்பலத்தில் ஸ்ரீ லங்கா சுத்திரக் கட்சி ஆட்சியமைத்தது. அத்தோடு ஆங்கிலலேயக் கவர்ணர்முறை மாற்றப்பட்டு திருவாளர் வில்லியம் கொப்பல்லாவ அவர்கள் குடியரசின் ஜனாதிபதியானார். இறைமையதிகாரம் பாராளுமன்றத்திடமே இருந்தது.

**நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை:**

1977 தேர்தலில் திரு. ஜே.ஆர். ஜெயவர்த்தனா அவர்களின் தலைமையில் ஐக்கிய தேசியக் கட்சி ஆறில் ஐந்து (5/6)பங்கிற்கு மேலாக பாராளுமன்ற ஸ்தானங்களைப் பெற்று ஆட்சி அமைத்தது. ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி எதிர்க்கட்சியாகக் கூட வரவில்லை. தமிழர் விடுதலைக் கூட்டணியே எதிர்க் கட்சியாய் வந்தது. திருவாளர் அமிர்தலிங்கம் எதிர்க்கட்சித் தலைவராக வந்தார். பெரும்பான்மைப் பலம் பெற்ற ஐக்கிய தேசியக் கட்சி நிறைவேற்று அதிகாரம் படைத்த ஜனாதிபதி முறைமை அரசியலை யாப்பாகக் கொண்டு சட்டம் ஆக்கினர். தொடர்ந்து விகிதாசார பிரதிநிதித்துவ முறைமையையும், பாராளுமன்றக் காலம் ஆறு வருடங்களாகவும், திறந்த பொருளாதாரக் கொள்கையும் நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்டன.

கல்முனையில் ஐக்கிய தேசியக் கட்சிப் பிரிதிநிதியாக ஜனாப்: ஏ.ஆர். மன்சூர் அவர்கள் அமோக வாக்குப் பலத்தால் வென்றார். இவர் ஜனாப் எம்.எஸ் காரியப்பரின் மற்றொரு மருமகனாவார். இவர் ஓர் அப்புக்காத்தர். நல்லொழுக்க முள்ளவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரின் காலத்தில் கல்முனை நகரமும் ஏனைய இடங்களும் பெருங்கட்டட வளர்ச்சி கண்டது.

திறந்த பொருளாதாரக் கொள்கை காரணமாக நாட்டுக் குத்தேவையான, தேவையற்ற பொருட்கள் என்ற வித்தியாசம் இல்லாது சகல பொருட்களும் இறக்குமதி செய்யப்பட்டன. இதனால் உள்ளூர் உற்பத்தி நிறுவனங்கள் இழுத்து மூடப்படும் நிலையில் இருந்தன. இதனால் தொழிலாளர்கள் வேலை இழந்தனர். நாட்டுக்குத் தேவையில்லாத போராயுதங்களும் இங்கு புகுந்தன. சிங்கள, தமிழ் ஆயுதக் குழுக்கள் தோற்றம் பெற்றன. சிறிதும், பெரிதுமான அரச எதிர்ப்பு ஆயுதப் போராட்டங்கள் வளர்ந்தன. அரசு இராணுவத்தை ஏவியது. நாடு அமைதி இழந்தது. சிங்கள ஆயுதக் குழுக்களை அடக்கினாலும், தமிழ் ஆயுதக் குழுக்களை அடக்கமுடியவில்லை. அக்குழுக்கள் அழிக்க முடியாத சக்தியாகி விட்டன. நிலைமையை ஆராயாது ஜனாதிபதி திரு ஜே.ஆர். ஜெயவர்த்தனா அவர்கள் யுத்தம் என்றால் யுத்தம், சமாதானம் என்றால் சமாதானம் என்று கூறினார்.

1984ல் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றது. திரு. ஜே.ஆர். ஜெயவர்த்தனா மீண்டும் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார். இதன் பின் பாராளுமன்றத் தேர்தலுக்குப் பதிலாக அபிப்பிராய வாக்கெடுப்பு (விளக்கு, முட்டி) தேர்தல் நடைபெற்றது. மக்கள் சாதகமாக (விளக்குக்கு) வாக்களித்தனர். இதனால் பாராளுமன்றம் தேர்தலைச் சந்திக்காது மேலும் ஆறு வருடங்களுக்கு நீடிக்கப்பட்டது. தமிழினத்தின் போராட்ட நிலை வளர்ச்சியடைந்தது. சிங்கள ஆயுதக் குழுக்கள் அடக்கப்பட்ட தெனினும் தமிழாயுதக் குழுக்கள் அழிக்க முடியாத நிலையில் இருந்தது தெரிந்ததே. இராணுவக்கெடு பிடிகள் அதிகரித்தன. இந்தியா தமிழ் நாட்டு அழுத்தத்தால் இலங்கைப் பிரச்சனையை கூர்ந்து கவனிக்கத் தொடங்கியது. இது இலங்கைக்குப் பாதகமான சூழ்நிலைகளை உருவாக்கியது. திறந்த பொருளாதாரக் கொள்கை காரணமாக தமிழ் மக்கள் அகதிகளாக வெளியேறத் தொடங்கினர் பல நாடுகளிலும் அகதிகள் நிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்ந்தன. சர்வதேச கவனமும் இலங்கையை வெறுப்போடு நோக்க வைத்தது. இதனை மேலும் கூட்டுவது போல 1983ல் குட்டிமணி போன்ற தமிழ் கைதிகள் வெலிக்கடைச் சிறைச் சாலையில் வைத்து வெட்டிக் கொல்லப் பட்டமையும் நடைபெற்று முடிந்தது. இதுவும் இன்னும் பல காரணங்களும் சேர்ந்து சர்வதேச சமூகம் இலங்கையின் இறைமையை மீறி யாழ்ப்பாண மக்களுக்கு விமானம் மூலம் உணவுப் பொட்டலங்களைப் போட இந்தியாவுக்கு அனுமதி அளித்தது போலிருந்தது. சர்வதேச சமூகம் வெளிப்படையாக இலங்கையைக் கண்டிக்கத் தொடங் கியது. தவிர்க்க முடியாத நிலையில் இலங்கை - இந்திய ஒப்பந்தம் ஏற்பட்டு இந்தியப் படைகள் இலங்கைக்குள் புகுந்தன.

இந்தியப் படைகள் இலங்கைக்குள் புகுந்து தமிழ் பிரதேசங்களான வடக்குக் கிழக்கில் நிலை கொண்டன. இலங்கை இராணுவமும் பொலிஸாரும் முகாம்களுக்குள் முடக்கப்பட்டனர். வடக்குக் கிழக்கில் பரந்தும், செறிந்தும் வாழ்ந்து வந்த முஸ்லிம்கள் பரிதாபத்திற்குரிய நிர்ப்பந்த சூழ்நிலைக்காளாக்கப்பட்டனர். இந்திய இராணுவமும் அத னோடு சேர்ந்த தமிழ் ஆயுதக் குழுக்களும் முஸ்லிம்களை சூறை யாடினர். முஸ்லிம் ஆண், பெண், சிறுவர் என்ற பேத மின்றி சித்திரவதைக்குட்பட்டு மரணித்தனர். இதுபற்றி எங்கும் முறையிட முடியாத நிலை. ஜனாதிபதி திரு. ஜே.ஆர். ஜெயவர்த்தனா கூட முஸ்லிம்களுக்காப் பேச எவரையும் அனுமதிக்கவில்லை. கிட்டத்தட்ட முஸ்லிம்கள் நிராதரவற்ற நிலையில் பலிகூடத்திற்குக் கொண்டு செல்லப்பட்ட ஆடுகளைப் போலாயினர்.

### ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தோற்றம்.

முஸ்லிம்களின் அப்போதைய அவலநிலை துடைக்க ஜனாப் எம்.எச்.எம். அஷ்ரப் என்ற இளைஞனைத் தவிர வேறு எவரும் முன்வராத நிலையில் வடக்கு கிழக்கு முஸ்லிகள் அவரையே தங்கள் தலைவராக ஏற்றனர். முஸ்லிம் காங்கிரஸ் என்ற மகுடத்தின் கீழ் முஸ்லிம்கள் அணி திரண்டனர். ஜனாப்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஷ்ரஃப் அவர்கள் முஸ்லிம் காங்கிரஸ் தலைவரானவுடன் விரைவாக நடவடிக்கைகளில் இறங்கினார். ஆட்சி அதிகாரங் களோடு மோதத் தொடங்கினார் சர்வதேச சமூகத்திற்கும் இங்குள்ள முஸ்லிம்களின் நிலை குறித்து விளக்கங்கள் கொடுத்தார் சர்வதேச முஸ்லிம் நாடுகள் இதில் கவனம் செலுத்தின. இந்தியாவும் இதுபற்றிய கவனத்தை மேற் கொண்டு செயற்பாட்டிற்கு வந்தது. இவ்வாறன நிலை வளர்ந்து சென்றதை இதுவரை கவனம் செலுத்தாத முஸ்லிம் அரசியல் வாதிகள் தங்கள் எஜமானர்களான தங்கள் பிரதமர் ஜனாதிபதி ஆகியோர்களைச் சந்தித்தனர். அதனை திரு. ஜே. ஆர் ஜெயவர்த்தனா அவர்கள் ஒரு பொருட்டாகக் கொள்ளவில்லை.

இவ்வாறான நிலையில் 1988ல் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்று எப்படியோ திரு. ஆர் பிரேமதாசா அவர்கள் ஜனாதி பதியானார். இந்தியப் படைகளினதும் அவர்களோடு சேர்ந்த தமிழ் ஆயுதக் குழுக்களினதும் கெடுபிடிகள் சற்றுத் தளர்ந்தன. இதற்குக் காரணம் முஸ்லிம் காங்கிரஸின் நடவடிக்கையே எனலாம். இளவல் ஜனாப் எம்.எச்.எம். அஷ்ரபின் வளர்ச்சி முஸ்லிம் அரசியல்வாதிகளுக்கும் ஆளும் வர்க்கத்தினருக்கும் பிடிக்காத ஒன்றாகவே இருந்தது. இதனால் அஷ்ரப் அவர் களுக்கு பல பயமுறுத்தல்கள் இருக்கத்தான் செய்தன.

ஜனாதிபதித் தேர்தலின் பின் 1989ல் பாராளுமன்றத் தேர்தல் நடைபெற்றது. இத்தேர்தலில் கிழக்கு வடக்குத் தவிர்ந்த ஏனைய இடங்களில் பல தில்லுமுல்லுகளுடன் ஐக்கிய தேசியக் கட்சி வென்றது. கிழக்கு வடக்கில் பல தமிழ் குழுக்களும் முஸ்லிம் காங்கிரஸும் வெற்றியீட்டின. வடக்குக் கிழக்கில் நிலை கொண்டிருந்த இந்தியப் படைகளும் அதனோடு சேர்ந்த தமிழ் ஆயுதக் குழுக்களும் நாட்டைவிட்டு வெளியேறின. இந்நிலை தோன்றும் முன்பே ஜனாதிபதி ஆர். பிரேமதாச விடுதலைப் புலிகளோடு ஒட்டி உறவாடத் தொடங்கினார். இந்தியப் படை வெளியேற்றத்துடன் புலிகளின் ஆதிக்கம் இங்கு நிலை கொண்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுதலைப் புலிகளின் வேட்டையாடலுக்கு எஞ்சி யிருந்த தமிழ் ஆயுதக் குழுக்கள் அகப்பட்டன. அவர்கள் கொழும்பிலும், ஏனைய இடங்கிலும் தஞ்சம் புகுந்தனர். இதே நேரம் வடக்கு மாகாணத்தில் இருந்த முஸ்லிம்களும் புலிகளால் வேட்டையாடப்பட்டு பொருட்கள் அனைத்தையும் இழந்த நிலையில் அகதிகளாய் வெளியேறினர். கிழக்கு மாகாண முஸ்லிம்களும் சூறையாடப்பட்டனர். ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என்ற பேதமின்றி சித்திரவதைக்கும் கொடூர கொலைக்கும் ஆளாகினர். சொத்துக்களும் கொள்ளை யிடப்பட்டன. இதற்கெல்லாம் காரணமாக ஜனாதிபதி ஆர் பிரேமதாசாவும் அவர்களின் அடி வருடிகளுமிருந்தனர்.

இந்நிலை 1994ஆம் ஆண்டு பொதுசன முன்னணி ஆட்சிக்கு வந்தபின் ஒழிந்தது. பொதுவாக இலங்கையின் இறைமையில் ஏற்படும் சகல நிகழ்வுகளும் கல்முனையில் பிரதிபலிக்காதிருப்பதில்லை. ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சி யில் முஸ்லிம்கள் பட்ட துன்ப துயரங்கள் என்றும் மறக்க முடி யாத மனப்பதிவுகளாகும். இவற்றைச் சிறிதளவு மேலே விளக்கி யுள்ளோம். இலங்கையின் மூவினங்களுள் முஸ்லிம்கள் மட்டுமே அழிவுகளையும், அடக்குமுறைகளையும் பொறுமை யோடு தாங்கி அமைதிக்காக பாடுபட்டு வருகின்றனர். சகல இனங்களோடும் நேயபான்மையோடு வாழவே விரும்புகின்றனர். எதிர்காலம் எப்படியிருக்கும் என்பதை யாம் அறியோம்.

**கல்முனை உள்ளூராட்சி:**

கல்முனை அதன் நீண்ட கால வரலாற்றில் சுறுசுறுப் பான இடமாகவே இருந்துள்ளது. இதனைப் பல முதியவர்கள் உறுதிப்படுத்துகின்றனர். இதன் அயலில் உள்ள கிராம மக்கள் தங்கள் பொருட்களை விற்கவும், தேவையான பொருட்களை வாங்கவும் நாள்தோறும் இங்கு கூடியுள்ளனர். வரலாற்றுக் காலத்திற்கு முன் அராபியர்கள் இங்கு வந்து வியாபாரத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈடுபடவும் இங்கிருந்து சென்று பாவா ஆதம் மலையைத் தரிசிப்பதற்கும் இங்கு வந்துள்ளனர் எனப் பல பெரியார்கள் கூறியுள்ளனர்.

ஒல்லாந்தர் கல்முனையை பிராந்திய தலைமைப் பீடமாகக் கொண்டு இங்குள்ள மக்களிடம் வரி அறவிட்டதாக வும், நீர்ப்பாய்ச்சல் அபிவிருத்தி, காணிப்பங்கீடு செய்ததாகவும்; அவர்களின் தோம்பு[2] கூறுகிறது. ஒல்லாந்தரின் பொருட் குதமாக "கிட்டங்கி" என்ற இடம் தொழிற்பட்டதாக அறிய முடிகின்றது. பிரித்தானியர் ஆட்சியின் போது கல்முனை நகரை 1869ஆம் ஆண்டு ஒரு நகரமாகவும் 1940ஆம் ஆண்டு பட்டின சபையாகவும் பிரகடனம் செய்த பின் 1946ஆம் ஆண்டு அதன் முதலாவது தேர்தல் நடைபெற்றது. அதன் தலைவராக ஜனாப்: இஸ்மாயில் காரியப்பர் தெரிவுசெயயப்பட்டார். இதனை அண்மையில் வெளியி டப்பட்ட கல்முனை நகர மலர் கூறுகின் றது. ஜனாப்: எம். இஸ்மாயில் காரியப்பர் தற்போதுள்ள துறை முக அமைச்சர் கௌரவ அல் - ஹாஜ் எம்.எச்.எம். அஷ்ரப் அவர்களின் பெரிய தந்தைகளில் ஒருவராவார். 1949ல்
கல்முனைப் பட்டினத்தின் இரண்டாவது தேர்தலில் இராசவாச முதலியார் ஜனாப். எம்.எஸ். காரியப்பர், கல்முனை யுனிவேர் சல் ஹோட்டல் உரிமையாளர் ஜனாப்: எஸ். லெப்பை போன்ற எழுவர் தெரிவு செய்யப்பட்டு, ஜனாப்: எஸ். லெப்பை பட்டின சபை தலைவரானார். இவரின் காலத்தில் அப்போதிருந்த இலங்கைக் கவர்ணர் சோல்பரி பிரபு கல்முனைக்கு விஜயம் செய்தார். அவரை வரவேற்ற பாக்கியம் ஜனாப்: எஸ். லெப்பை அவர்களுக்கே கிடைத்தது. இதன் பின் எஸ். லெப்பை அவர்கள் பதவி துறந்தார். பின்னர் ஜனாப்: எம்.எஸ். காரியப்பர் அவர்கள் பட்டின சபைத் தலைவரானார்.

**பட்டின சபைக்குச் சொந்தமான கட்டிடம்:**

1952வரை கல்முனைப் பட்டின சபைக்கு சொந்தமான காரியாலயம் இருக்க வில்லை. இக்குறைபாட்டை நீக்க

2. ஜனாப். எம்.எல்.ஏ. காதர் துணைவேந்தர், தென்கிழக்குப் பழக்கலைக் கழகம் "அம்பாறை மாவட்ட முஸ்லிம்கள் 1அத்தி வரலாற்றுப் பாரம்பரியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராசவாசல் முதலியார் எம்.எஸ். காரியப்பர் அவர்கள் முயன்றார்கள் அதற்கான இடமாக அப்போதிருந்த கல்முனை முற்ற வெளியைத் தெரிவு செய்து அத்திவாரமிட்டார். இதனை விரும்பாத கல்முனை கத்தோலிக்கர்கள் எதிர்த்தனர். முக்கியமாக அப்போதிருந்த கல்முனை பிரிவுக் காரியதிகாரி திரு. தியோபிலஸ் அவர்களும், கல்முனை கத்தோலிக்க கிறிஸ்தவ தேவாலய பிரதம குரு பாதிரி குக் அவர்களும் எதிர்த்தனர். "கல்முனைத் தேவாயலத்தில் நடைபெறும் வணக்க வழிபாடுகளுக்கு பட்டின மண்டப நிகழ்ச்சிகள் குந்தகம் விளைக்கும்" எனக் காரணம் கூறினர். அதே நேரம் கட்டப்படும் கட்டிடத்திற்கு வெகு அருகில் முஸ்லிம் பள்ளிவாசல் இருந்தது. மிகுந்த போராட்டங்களுக்கு மத்தியில் 1953ஆம் ஆண்டு பட்டின சபைக் காரியாலய மண்டபம் கட்டி முடிக்கப்பட்டது.

இராசவாசல் முதலியார் ஜனாப். எம்.எஸ். காரியப்பர் 1967 ஆம் ஆண்டுவரை பட்டினசபைத் தலைவராயிருந்து கல்முனைச் சந்தை அபிவிருத்தி, கடைகள் அபிவிருத்தி, பாதைகள் அபிவிருத்தி, மின்சாரம், சுற்றாடல் சுகாதாரம் என்பவற்றில் முன்னேற்றம் கண்டார். குறிப்பாக ஒரு சிறந்த பட்டினமாகவும் வருவாய் கூடியதாகவும் கல்முனை விரிவடைந்தது. இப்பெருமை இராசவாசல் முதலியார் எம்.எஸ். காரியப்பரையே சாரும். 1967ம் ஆண்டிலிருந்து கல்முனைப் பட்டினசபை அரசியலில் இருந்து இவர் ஒதுங்கினார். எனினும் தன் ஆதரவாளர்களே பட்டின ஆட்சியைத் தொடர வேண்டும் என விரும்பினார். இதற்குத் தடையாக புதிதாக அரசியல் செல்வாக்குப் பெற்ற ஜனாப்: எம்.சி. அஹமது செயற்பட்டார். கல்முனை ஏழு வட்டாரங்களை அப்போது கொண்டிருந்தது. ஐந்து முஸ்லிம் வட்டாரங்களாகவும், இரண்டு தமிழ் வட்டாரங்களாகவும் இருந்தன. முஸ்லிம் வட்டாரங்களில் நான்கு எப்போதும் எம்.எஸ். காரியப்பருக்கு பக்கபலமாக இருந்தன. இப்போது ஜனாப்: எம். சி. அஹமது அவர்கள் அந்நான்கில் ஒன்றை தன் பக்கம் சாய்த்துக் கொண்டார். இது எம்.எஸ். காரியப்பர் அணிக்கு பாதகம் தரவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் வட்டாரப் பிரதிநிதி திரு. எம். தம்பிப் பிள்ளையை ஒரு வருட பட்டின சபைத் தலைவராகவும் மீதி இரண்டு வருடங்கள் எம்.எஸ். காரியப்பர் அணியில் உள்ளவர்களுக்கு விட்டுக் கொடுப்பதாகவும் கனவான் ஒப்பந்தம் செய்யப்பட்டது. இதன்படி திரு. எம். தம்பிபிள்ளை பட்டின சபைத் தலைவரானார்.

இந்நிகழ்வு ஜனாப்: எம்.சி. அஹமதுவுக்கும் அவரது அணியினர்க்கும் பெரும் அடியாய் வீழுந்தது. அத்தோடு கடுமை யான. மோதலுக்கும் அத்திவாரமிட்டது. இவ்வாறான சூழ்நிலை யில் ஜனாப்: எம்.எஸ். காரியப்பருக்கு பணத்தேவை ஏற்பட்டது. அவரது பத்து ஏக்கர் நிலம் கல்முனை வாடிவீட்டருகிலிருந்தது. அதனை விற்க முனைந்தார். பல செல்வந்தர்களுக்கும் ஆளனுப்பினார். எவரும் மொத்தமாக வாங்க முனையவில்லை. எனவே காரியப்பர் ஆதரவாளன் ஜனாப்: எம்.எஸ். ஹமீது அவர்கள் அந்நிலத்தை சிறு துண்டுகளாக்கி ஒவ்வொரு துண்டும் ரூபா. 500/= விலையில் வீடற்றவர்களும், நிலமற்றவர்களுமான ஏழை முஸ்லிம்களுக்கு விற்பதற்கு ஒழுங்கு செய்தார். இதனை ஏழைகள் முண்டியடித்துக் கொண்டு வாங்கினர். வந்தவர்களுக்கு இந்நிலத்துண்டுகள் போதுமாயிருக்கவில்லை. இந்நிலத்தோடு சேர்ந்த அரசநிலங்கள் பக்கத்தில் இருந்தமை யால் அவையும் குடியேற்ற நிலங்களாயின. எல்லாமாக சுமார் 600 குடும்பங்களுக்கு மேல் அங்கு குடியேறினர். அவர்கள் சுமார் நான்கு மாதங்களுக்கு மேல் வாழ்ந்தும் விட்டனர். 1967 ஆம் ஆண்டு தருணத்தை எதிர்பார்த்திருந்த ஜனாப்: எம்.சி. அஹமதும் அவரது சகாக்களும் மோதலுக்கு ஆயத்தம் செய்தனர். இவரின் அத்தியந்த நண்பன் விஜயாவும் இதில் முக்கிய பங்கு வகித்தார் இவர் அப்போது கல்முனை இரண்டாம் வட்டார பட்டின சபை உறுப்பினராவார். இவரின் தலைமையில் சுமார் நூற்றுக்கதிக மானவர்கள் இரவோடு இரவாக வன்செயலில் இறங்கினர். குடியேறியிருந்த மக்களின் குடிசைகளில் தீ வைத்தனர். நட்ட நடு இரவில் மக்கள் திக்குத் திசை தெரியாது தலை தெறிக்க ஓடினர். இரண்டு தினங்களாக இவ்வன்செயல் நடைபெற்றது. இவ்வன்செயல் வீரர்கள் மற்றொரு அடாத செயலனையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தனர். ஒரு முஸ்லிம் பெண்ணைப் பிடித்து அவரின் சீலையை உரிந்து மானபங்கப் படுத்தினர் அத்தோடு அச்சீலையைத் துண்டு துண்டுகளாக்கி கொடிகள் கட்டி ஊர்வலம் சென்றனர். இந்த ஊர்வலத்தில் இனவிரோத தூசன வார்த்தைகள் கோஷமாய் இருந்துள்ளன.

இவ்விழிநிலையை பொறுக்கமாட்டாத முஸ்லிம் மக்கள் இதே போன்றிருந்த தமிழ் மக்களின் குடியிருப்பில் பாய்ந்தனர். இப்போது இரு இன மக்களும் பாரிய இழப்புக்குள்ளாகினர். இவ்விழி நிலையை சம்மந்தப்பட்ட சூத்திரதாரிகள் பின்னர் உணர்ந்தார்கள், வெள்ளம் வந்தபின் அணைகட்ட முயன்றனர். இதில் பாதிக்கப்பட்ட இரு இன மக்களும் ஜனாப் எம்.சி. அஹமது அவர்களின் ஆதரவாளர்கள் ஒருசிலர் மட்டும்தான் காரியப்பர் அணியைச் சேர்ந்தவர்கள். இன்று இவ்விழி நிலைகள் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் வாழ்கின்ற முஸ்லிம்களுக்கு ஏற்பட்டுக் கொண்டே இருக்கின்றன. யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி போன்ற இடங்களிலும், மூதூர், வாழைச்சேனை, ஏறாவூர், காத்தான்குடி மக்களுக்கும் ஏற்படும் துன்பங்களை இனத் துடைப்புக்குரிய சூத்திரதாரிகள் சிந்திக்க வேண்டாமா? இவ்வினத்துடைப்பிற்கு முஸ்லிம்கள் மட்டும்தான் ஆளாகி வருவது கண்கூடு.

ஒப்பந்தப்படி திரு. எம். தம்பிப்பிள்ளை அவர்கள் பதவி விலக ஜனாப்: எம்.சி. அஹமது பட்டின சபைத் தலைவரானார். இவர் 1972ஆம் ஆண்டு பாராளுமன்றம் செல்ல ஜனாப். மொஹிடீன்பாவா அவர்கள் பட்டின சபைத் தலைவரானார். இவரின் பின் ஜனாப்: கே.கே. மரைக்கார் அவர்கள் தலைவரானார். 1973இல் விஷேட ஆணையாளர்களாக ஜனாப்: கால்டீன் உதவி அரசாங்க அதிபர் அவர்களும், ஜனாப்: காதர் சாஹிப் உதவிக் கூட்டுறவு ஆணையாளர் அவர்களும் பொறுப்பேற்றனர்.

1981ஆம் ஆண்டு மாவட்ட அபிவிருத்திச் சபை ஏற்படுத்தப்பட்டது. இதன் தேர்தலில் ஜனாப்: எம்.எச்.எம். ஜஃபர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டத்தரணி அவர்கள் தெரிவு செய்யப்பட்டு இச்சபையின் தலைவரானார். இச்சபையின் கீழ் அம்பாறை மாவட்ட உள்ளூராட்சி மன்றங்கள் உப அலுவலகங்களாக மாற்றப் பட்டன. இதன்படி கல்முனை பட்டினசபை உபஅலுவலக மாகியது. இதன் பொறுப்புவாய்ந்த அலுவலராக தொழிலாணை யாளர் ஜனாப்: உமர்லெப்பை அவர்களும் இவரின் பின் உதவி அரசாங்க அதிபர் ஜனாப்: காஸ்மீன் அவர்களும் நியமிக்கப் பட்டனர். இவர்களுக்கு முன் முன்னாள் கௌரவ வர்த்தக அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஜனாப்: ஏ.ஆர். மன்சூர் அவர்களின் செயலாளர் ஜனாப்: ஏ.எல்.ஏ.எம். பழீல் அவர்களும் விசேட ஆணையாளராக கடமையாற்றினார். 1988.01.01 இல் இவ்வுப அலுவலகம் பிரதேச சபையாக மாற்றப்பட்டது. இதன் முதலாவது விஷேட ஆணையா ளராக உதவி அரசாங்க அதிபர் முயினுதீன் நியமிக்கப்பட்டார். இவரின் பின் உதவி அரசாங்க அதிபர் ஜனாப். ஏ.எல். எம். பழீல் விஷேட ஆணையாளராக நியமிக்கப்பட்டார்.

1994. 04. 04இல் பிரதேச சபைத் தேர்தல் நடாத்தப்பட்டு ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஜனாப்: ஐ.ஏ. ஹமீத் அவர்கள் தவிசாளரானார். பின்னர். பரஸ்பர விட்டுக் கொடுப்பின் பெயரில் எஸ்.எச்.ஏ. மஜீத் அவர்கள் தவிசாளரா னார். 1998. 04. 03 இல் இருந்து சபையின் காலம் ஒரு வருடத் தால் நீடிக்கப்பட்டது. இதன் பின் சபை கலைந்து விஷேட ஆணையாளர் பொறுப்பில் விடப்பட்டது. 1999.06.11இல் கல்முனை நகரசபையாக மாறியது இன்னும் தேர்தல் நடாத்தப் படவில்லை. விசேட ஆணையாளர் ஜனாப். ஏ.எல்.எம். பழீல் அவர்கள் பொறுப்பில் விடப்பட்டுள்ளது. இங்கே ஒரு பெரிய மாற்றத்தினைக் குறிப்பிட வேண்டும். கல்முனை பட்டினசபை எல்லைகள் விரிந்து பல கிராம சபைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. அவை கரைவாகுத் தெற்கு, கரைவாகு வடக்கு, கரைவாகு மேற்கு கிராமசபைகளே அவைகளேயாகும்.. இதற்கு முன் பட்டின சபையின் எல்லைகள் வடக்கே தாளவட்டவான் வீதி தெற்கே கல்முனை சாய்ந்தருது எல்லைவீதி (தற்போது சாஹிறா வீதி) மேற்கே வயலும் கிழக்கே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடலும் இருந்தன. தற்போது பெரிய நீலாவணை வடக்கும் தெற்கே மாளிகைக்காடு வீதியும் எல்லைகளாக விரிந்துள்ளன. இவற்றுள் அடங்கிய கிராமங்கள் வடக்கிலிருந்து பெரிய நீலாவணை, மருதமுனை, பாண்டிருப்பு, மேற்கே சேனைக்குடியிருப்பு நற்பிட்டிமுனை, தெற்கே சாய்ந்தமருது என்பனவாகும். தற்போது நகர சபையுள் ஏழு கிராமங்கள் உள்ளடங்குகின்றன.

## இனரீதியான பிரதேச செயலகம்:

கல்முனை வரலாற்றின் இனரீதியான உள்ளூராட்சி மன்றங்களோ அரச நிருவாகப் பிரிவுகளோ இருந்ததில்லை. வழமையாக கரைவாகுப் பற்று காரியதிகாரிப் பிரிவு மட்டுமே இருந்தது. உள்ளூராட்சி மன்றங்களாக கரைவாகுப் பற்று வடக்கு, மேற்கு, தெற்கு என்ற பிரிவுகளுடன் மூன்று கிராமசபைகள் இருந்தன. மத்தியில் பட்டினசபை இருந்தது. இவ்வுள்ளூராட்சி மன்றங்கள் இனரீதியாக பிரிக்கப்பட்டிருக்கவில்லை. இவை இடங்களை மையமாகக் கொண்டே பிரிக்கப்பட்டு செயல்பட்டன. இந்நான்கு உள்ளூராட்சி மன்றங்களில் முஸ்லிம்கள், தமிழர்கள், சிங்களவர், பறங்கியர் என நான்கு சாதியினர் வாழ்ந்து பங்களிப்புச் செய்தனர். இவர்களிடையே இனரீதியான வேற்றுமைகள் காணப்படவில்லை. எல்லோரும் சமத்துவமாகவும் ஒற்றுமையாகவும் வாழ்ந்தனர். இவர்களிடையே மொழி வேற்றுமைகள் கூட பெரிதாகத் தோன்ற வில்லை. சமய அநுட்டானங்களும் இடைஞ்சல்கள் இல்லாது திடகாத்திரம் பெற்று மிளிர்ந்தன. தொழில் சுதந்திரம் தனிமனித உரிமைகள் என்பவற்றிலும் தடங்கல்கள் இருந்ததில்லை. எல்லோரும் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள் போன்று அவரவர் சுகபோகங்களை அனுபவித்து வந்தனர்.

இதே போன்று நிந்தவூர்ப்பற்று, சம்மாந்துறைப்பற்று அக்கரைப்பற்று, பாணமைப்பற்று என்ற பெரும் பிரிவுகளிலும் மக்கள் சௌஜன்யமாக வாழ்ந்தனர். இவ்வாறான பிரிவுகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரச நிருவாகப் பிரிவுகளாக காரியதிகாரிப் பிரிவுகள் இருந்தன. உள்ளூராட்சி மன்றங்கள் ஒரு கிராமத்திற்கோ அல்லது 2, 3 கிராமங்களுக்கு ஒன்று என்ற விகிதத்திலோ இயங்கி வந்தன. காலகெதியில் சனச்செறிவு அதிகரிப்பு விகிதத்தில் உள்ளூராட்சி மன்றங்களும் அரச நிருவாகப் பிரிவுகளும் இடங்களை அடிப்படையாகக் கொண்டே ஏற்படுத்தப்பட்டன. இனரீதியாக ஒரு போதும் இவை மையப்படுத்தப்படவில்லை.

இதே நிலையில் 1981ம் ஆண்டு ஒரு மாவட்டத்திற்கு ஒரு சபை என ஏற்படுத்தப்பட்டு மாவட்ட அபிவிருத்திச் சபை என்ற பெயரில் உள்ளூராட்சி மன்றங்கள் இலங்கை முழுவதிலும் பரிணமித்தன. இவ்வாறே அம்பாறை மாவட்டத்திலும் ஒரு மாவட்ட அபிவிருத்திச் சபை தாபிக்கப்பட்டு தேர்தலும் நடந்தது. இத்தேர்தலில் தெளிவாக மூன்று இனப் பிரதிநிதிகளும் இச்சபையில் அங்கம் வகித்தனர். இதன் தலைவராக மறைந்த சட்டத்தரணி ஜனாப். எம்.எச்.எம். ஜஃபர் தெரிவு செய்யப்பட்டார் இங்கேயும். இன ரீதியான பிணக்குகள் தோன்றவில்லை.

இச்சபைகள் செயற்பட்ட விதத்தில் ஏற்பட்ட பிணக்குகள் காரணமாக கலைக்கப்பட்டு 1988.01.01ல் பிரதேச சபைகள் அமுலுக்கு வந்தன. இவற்றிலும் கூட இனரீதி காணப்படவில்லை. சமீபத்தில் கிராமசபைகள் இருந்த இடங்கள் பிரதேச சபைகளாகவும் அவற்றுக்கு நிருவாகப் பிரிவுகளாக பிரதேச செயலகங்களும் ஏற்படுத்தப்பட்டன. இவ்வாறே நிந்தவூர்ப் பற்றிலிருந்த காரைதீவுக் கிராமம் பிரதேச சபையையும் பிரதேச செயலகப் பிரிவையும் பெற்றது. இங்கே கூட இனரீதியாகப் பிரிக்கப்படவில்லை. இப்பிரிவில் காரைதீவுத் தமிழ் மக்களும், மாளிகைக்காட்டு, மாவடிப்பள்ளி முஸ்லிம்களும் ஒற்றுமையாக வாழ்கின்றனர் இங்குள்ள முஸ்லிம்கள் தங்களுக்கென ஒரு செயலகப் பிரிவையோ பிரதேச சபைப் பிரிவையோ கோரவில்லை அவர்களும் தமிழர்களோடு சேர்ந்து வாழ்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறான நிலைமைகள், வழக்காறுகள் இருக்க கல்முனையில் மாத்திரம் இனரீதியான செயலகப் பிரிவொன்று வடக்கு - கிழக்கு மாகாண சபையினால் ஏற்படுத்தப்பட்டது. இவர்களுக்கு தமிழர்கள் மட்டும் வாழும் பிரிவொன்று கனவில் தோன்றியிருக்க வேண்டும் அல்லது முஸ்லிம்களில் ஒரு பிரிவினரை இவர்கள் தமிழர்கள் என்று எண்ணியிருக்க வேண்டும். உண்மையில் முஸ்லிம்களும் தமிழர்களும் இங்கு பின்னிப் பிணைந்து வாழ்கின்றனர் இவ்விரு சமூகத்தவர்க்கும். ஏற்கனவே ஒரு பிரதேச செயலகம் இயங்கி வருகிறது அதன் சேவை இனரீதியாகக் காணப்படுகின்றதாயின் அதற்குரிய சட்ட நடவடிக்கையினை எடுத்திருக்கலாம். இதைவிடுத்து தனியான தமிழர் செயலகப் பிரிவொன்றை ஏற்படுத்தியது நியாயமற்றது.

இச்செயலகப் பிரிவினால் அநாவசியமான தொல்லைகள் ஏற்படுகின்றது. முதலாவதாக இனங்களிடையே ஒற்றுமை சீர்குலைவு ஏற்படுகின்றன. இறப்புப் பிறப்புப் பதிவுச் சான்றிதழ்கள் பெறுவதில் இரு வேறு இடங்களுக்கு அலைய வேண்டியுள்ளது. குறிப்பாக முஸ்லிம்களுக்கே கூடுதல் சிரமம் தோன்றுகிறது. வேறு சில கருமங்களுக்கும் தடையாக இருக்கின்றது. ஒரே பிரதேசத்தில் இரு வேறு நிருவாகங்கள் காணப்படுவதோடு நிருவாகச் சிக்கல்களும் தோன்றுகின்றன. இவ்வாறான சிரமங்களுக்கு மத்தியில் பொது மக்கள் அலைய வேண்டியுள்ளது.

இவ்விரு செயலகப் பிரிவுகளில் ஒன்று வடக்கு - கிழக்கு மாகாண சபையின் செயற்பாட்டின் கீழும் மற்றது மத்திய அரசின் செயற்பாட்டின் கீழும் இயங்குகின்றன. இங்கு மத்தியரசின் ஒதுக்கீடுகள் மத்தியரசின் கீழுள்ள செயலகப் பிரிவிற்கே கிடைக்கின்றன. ஆனால், மாகாணசபை அவ்வொதுக்கீடுகளை சரிசமமாகப் பிரித்து பெரும்பான்மையான முஸ்லிம்களின் பங்கீட்டில் குறைவை ஏற்படுத்துகின்றது.

இங்கு குறிப்பாக பெரும்பான்மையான முஸ்லிம்களுக்குக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைக்க வேண்டிய பங்கீடு வேண்டும் என்றே குறைவு செய்யப் படுகின்றது. இதனால் சிறுபான்மையான தமிழர்க்கு அவர்களின் அளவுக்கு மேல் கொடுக்கப்படுகிறது. இது செயலகப்பிரிவில் மட்டுமல்ல ஏனைய கல்வி சுகாதாரம் போன்ற துறைகளிலும் கடைப்பிடிக்கப்படுகின்றது. இதற்கு முக்கியமாக வடக்குக் கிழக்கு மாகாணசபையில் இவற்றைக் கவனிக்கும் பொறுப்புவாய்ந்த அதிகாரிகள் அதிகமாக தமிழர்களாகவே உள்ளனர். தப்பித்தவறி முஸ்லிம்கள் எவராவது அவ்விடங்களில் ஒன்றுக்கு நியமனம் பெற்றால் அவர்களை அவ்விடங்களில் இல்லாது ஒழிப்பதில் கவனம் செலுத்தப்படுகிறது. இவ்வாறு முஸ்லிம்கள் இனநெருக்குதல்களுக்கு ஆளாகிவருகின்றனர். இவ்வாறான செயற்பாடுகளால் முஸ்லிம் களுக்கு தனியான மாகாணசபை அல்லது அதற்கு ஈடான அதிகார அலகு ஒன்று தேவைப்படுகின்றது. இதுவே இப்பிரச்சினைக்குத் தீர்வாகவுள்ளது.

இதேநேரத்தில் கரைவாகுத்தெற்கு கிராமசபையாக இருந்த இடம் சாய்ந்தமருதூராகும். காரைதீவுக்கு ஒரு செயலகப் பிரிவு கொடுக்கப்பட்டிருப்பது போல் சாய்ந்தமருதூருக்கும் ஒரு செயலகப் பிரிவு கொடுக்கப்பட்டிருப்பது இனரீதியானதல்ல. இந்தச் செயலகப் பிரிவைச் சுட்டிக்காட்டி கல்முனையில் இனரீதியான செயலகப் பிரிவை நியாயப்படுத்த முடியாது. இதைத்தவிர கரைவாகு வடக்கு கிராமசபையிருந்த பிரதேசத்தையோ கரைவாகு மேற்கு கிராம சபையிருந்த பிரதேசத்தையோ அல்லது இரு பிரதேசங்களையும் உள்ளடக்கியோ ஒரு செயலகப்பிரிவைக் கோரினால் மிகச் சிறப்பாகவிருக்கும். இதைவிட்டு கல்முனைப் பட்டினத்தைக் கூறுபோட நடவடிக்கை எடுத்திருப்பது இனரீதியானதும் கண்டிக்கத் தக்கதுமாகும். எனவே வரலாற்று ரீதியாகவும், பாரம்பரியமாகவும் இருந்துவந்த கல்முனைப்பட்டினப் பிரதேசத்தைக் குழப்பாமல் கல்முனைத் தமிழர் செயலகப் பிரிவை நீக்கி இன ஒற்றுமையை வளர்ப்பதே சிறந்த செயலாகும்.

இதனோடு வடக்குக் கிழக்கு மாகாணசபையில் தமிழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாரிகளோடு முஸ்லிம் அதிகாரிகளும் கடமையாற்ற வேண்டும். இதனால் வடக்குக் கிழக்கில் வாழும் முஸ்லிம்களின் சேம நலன்கள் பேணப்படமுடியும். இதனை சட்டரீதியானதாகவும் ஆக்க வேண்டும்.

## நிருவாகம்

சமயக் கலாச்சார பண்பாட்டு ரீதியான பரிபாலனம், அரச பரிபாலனம் என இருவகையாகப் பிரிக்கலாம். அரச பரிபாலனத்தில் வரி அறவிடல் பொது சௌக்கியம், போக்கு வரத்து வசதிகள் என உள்ளூராட்சி மன்றங்களின் பணிகளும் சேர்ந்திருந்தன. இருபதாம் நூற்றாண்டு ஐம்பதுகளில் இருவகை யான நிருவாகங்கள் இருந்தன எனக்கூறலாம்.

### மரைக்காயர் சபை நிருவாகம்:

இது பள்ளிவாசலை அடிப்படையாகக் கொண்டு செய்யப்பட்டது. இஸ்லாமிய நெறி, பண்பாடு, விழுமியங்கள் இதில் பரிணமித்தன. இஸ்லாமியக் கல்வி ஐங்காலக் கடமைகளோடு விவாகம், மரணம், உடை நடை பாவனைகள் என்பன இங்கு வலியுறுத்தப்பட்டன. குற்றவியல் நீதிமன்றக் கடமைகளும் இங்கு கவனிக்கப்பட்டன. மரைக்காயர் சபை குர்ஆன் பாடசாலைகளை ஏற்படுத்தி சிறுவர்களுக்கு குர்ஆனை ஓதவும் கலிமாக்கள், இஸ்லாமியாக் கடமைகள் ஒழுக்க நெறிகளோடு இஸ்லாமிய வாழ்க்கை நெறிகளோடு சார்பான மௌலீதுகள் புர்தாக்கள் என்பன சிறார்களுக்குக் கற்பிக்கப் பட்டன. இவற்றைப் பயிற்றுவிக்கும் ஆலிம்கள் லெப்பைகளின் வருமா னத்திற்கும் மரைக்காயர்சபை ஒழுங்கு செய்தது. சம்பிரதாய முறையில் மார்க்க உபன்னியாசங்கள் செய்கை முறைகள் என்பன ஊர் மக்களுக்கு வாரந்தோறும் போதிக்கப்பட்டன. இவற்றின் மூலம் இஸ்லாமிய ஒழுக்க நெறிகள் கடைப்பிடித்தல் போன்றவற்றையும் பள்ளிவாசல் நிருவாகிகள் கவனித்தனர். இத்தோடு கத்தம், பாத்திஹா, கந்தூரிகள் போன்றவற்றால் தானதர்மங்கள் ஊக்குவிக்கப் பட்டன. இவற்றைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயல் முறைப்படுத்த மார்க்க அறிஞர்கள் லெப்பைமார்களுக்கு ஊதிய ஒழுங்கும் செய்யப் பட்டது. நீதி சம்பந்தமான பிணக்குகள், தவறுகள் என்பன போன்ற வழக்குகள் விசாரிக்கப்பட்டு தீர்ப்புகளும் வெளியிடப்பட்டன. சமய சம்பந்தமான குற்றங்களுக்கு தண்டனை கொடுக்கப்பட்டன.

இவ்வாறான செயற்பாடுகளைச் செயற்படுத்திய மரைக் காயர்கள் போடிமார்களாகவும் தனவந்தர்களாகவும் இருந்தனர். இவர்கள் ஊரிலிலுள்ளவர்களில் அநேகருக்கு தொழில் வழங்குப வர்களாகவும், தான தர்மங்களை செய்வோர்களாகவும் இருந்தமையால் ஊரில் இவர்கள் கட்டுப்பாடுகள் வெகுவாக மதிக்கப்பட்டன. பிற்காலத்தில் அரசியல் போக்குவரத்து ஊடகத்துறை என்பன இந்நிருவாகத்தைச் சீரழித்துள்ளன.

**அரச நிருவாகம்:**

வன்னிமைகளின் நிருவாகம் அரசாங்கத்தின் சட்டங்களை காலத்துக்குக் காலம் அமுல்படுத்துவதும் குடிகளின் பெயர் விபரங்கள், குடும்ப விபரங்கள் வருடாந்த மாதாந்த அறிக்கை கள் சொத்து விபரங்கள் போன்றவற்றை ஆவணப்படுத்துவதும் ஊரின் பாதுகாப்பு குற்றச் செயல்களைத் தடுத்தல், பாதைகள், அணைக்கட்டுகள், குளங்கள் சம்பந்தமான அபிவிருத்திகள் வரி அறவிடல், பொது சௌக்கியம் போன்றவற்றைக் கவனித்தல் என்பனவாகும்.

இவ்வேலைகளைக் கவனிக்க வன்னிமைகளின் மேற் பார்வையின் கீழ் குறிச்சி விதானைகள் இருந்தனர். விதானைகள் அவர்களின் கிராமங்களில் குட்டிசர்வாதிகாரிகள் போல இயங்கினர். களவு, குற்றச்செயல்கள் என்பனவற்றை உடனுக் குடன் கண்டுபிடித்து தண்டனையும் ஸ்தலத்திலேயே கொடுப்பர். கொலைக் குற்றங்கள் செய்வோரை பொலிஸில் ஒப்படைத்தல் அரசின் தேவைக்கேற்ப விபரங்களைத் திரட்டி வன்னிமை களிடம் ஒப்படைத்தல் என்பன குறிச்சி விதானைகளின் வேலை யாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விதானைமார்கள் கிராமத் தலைவர்கள் என அழைக்கப்பட்டனர். இவர்களைத் தெரிவுசெய்யும் போது ஓரளவு கல்வித்தகைமை கவனிக்கப்பட்டது. நன்கு எழுதவாசிக்கத் தெரிந்திருத்தல் வேண்டும் என்பதோடு குடும்ப அந்தஸ்த்து ஈஈஈஈ நல்லொழுக்கம், மக்கள் செல்வாக்கு, ஊரின் பாரம்பரியங்களை அறிந்திருத்தல், நேர்மை என்பன கவனிக்கப்பட்டன. இப்படி யான தகைமைகள் கொண்டோர்களிடமிருந்து கிராமத் தலை வருக்கான விண்ணப்பங்கள் கோரப்படும். அதிகாரிகள் விண்ணப்பித்தவர்களை நேர்முகப் பரீட்சைக்கு பொது இடமொன்றிற்கு அழைப்பார். இங்கே கிராம மக்கள் கூடுவர் இக்கூட்டத்தை பொறுப்பு வாய்ந்த அதிகாரி ஒருவர் நெறிப் படுத்துவார். விண்ணப்பித்தவர்கள் ஒவ்வொருவராக அழைக்கப் பட்டு பொது மக்களின் விமர்சனங் களுக்கு இடமளிக்கப்படும். பொது மக்கள் நேரடியாக மிகக்காரசாரமாக விமர்சனம் செய்வர். இவ்விமர்சனம் எனும் போது சம்மந்தப்பட்டவரின் குற்றங்குறைகள் மட்டுமல்ல அவரது குடும்பம் பரம்பரையில் உள்ள குற்றங்கள் குறைகள் கூட வெளி வந்துவிடும். இவற்றைக் கேட்பதற்கென்றே அங்கு பெருங்கூட்டம் சேர்ந்து விடும். இந்த விமர்சனங் களுக்குட்படாத ஒருவரே கிராமத் தலை வராக நியமனம் பெறுவார். இந்த விமர்சனத்திற்குப் பயந்து அநேகம்பேர் இவ்வேலைக்கு விண்ணப்பிப்பதில்லை.

இவ்வாறு நியமனம் பெற்ற விதானைகளுக்கு பொது நிருவாகப் பெறுப்புடன் பொலிஸ் கடமையும் சேர்த்து வழங்கப்ப டும். இவர்களைப் பொது மக்கள் பொலிசானை என்றழைப்பர். இவர் ஓர் சர்வாதிகாரிபோல் நடந்து கொண்டாலும் பள்ளிவாசல் நிருவாகத்தில் தலையிட மாட்டார். மரைக்காயர் சபையை வன்னிமைகள் மதித்து நடத்துவார்கள் பொது விடயங்களில் மரைக்காயர் சபையிடம் ஆலோசித்தே வன்னிமை முடிவு செய் வார். அக்காலத்தில் மரைக்காயர் சபை சக்திவாய்ந்ததாக இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்முனையில் 1940க்கு முன் பொலிஸாரோ பொலிஸ் நிலையமோ இருந்ததாக எவரும் கூறவில்லை. இதன் பின் மூவர் கொண்ட பொலிஸ்காரர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். இருந்தும் பொலிஸ் கடமை செய்ய மட்டக்களப்புப் பொலிஸ் நிலையமே பொறுப்பாக இருந்துள்ளது. கல்முனையில் இருந்த மூன்று பொலிஸ் வீரர்களில் ஒருவர் சேர்ஜென் இவரை பொது மக்கள் பறக்கத்துப் பொலிஸ் என்றழைப்பர். பறக்கத் என்பது அறபுச் சொல். அதற்கு தெய்வ அருள் என்றும் ஒரு கருத்துண்டு ஆனால் இங்கே சன்மானம் என்ற பொருளே கொள்ளப்பட வேண்டும். இந்த பறக்கத்துப் பொலிஸார் பறங்கி இனத்தைச் சேர்ந்தவர். இவர் பொது மக்களிடம் பறக்கத் கொடுங்கள் என்று கேட்டுக் கொண்டே இருப்பாராம் அதனால் இவரை பறக்கத் பொலிஸ் என்று மக்கள் அழைக்கத் தொடங்கினர். மக்கள் இப் பறக்கத் பொலிஸாரைக் கண்டால் ஓடி ஒழிப்பராம். காரணம் நின்றால் பறக்கத் கொடுக்க நேரிடுமே என்று பயம். அப்போது மூன்றே மூன்று பொலிஸார்கள் மட்டும் தான் கல்முனைப் பிராந்தியத்தையே கட்டியாண்டனர். இத்தனைக்கும் அவர்களிட மிருந்த ஆயுதம் ஒரு பொல் (குண்டாந்தடி) மட்டும்தான். இக்காலப் பொலிஸாரிடம் இருப்பதோ பயங்கர ஆயுதம். இருந்தும் என்ன பயன். இன்று கல்முனையில் சுமார் ஆயிரம் பொலிஸ் வீரர்கள் கொண்ட பொலிஸ் நிலையம் உள்ளது.

அக்காலத்தில் வரி அறவிடுவோர் ஊருக்கு ஒருவர் நியமிக்கப்பட்டனர். இவர்களை லோக்கல்போர்ட் உடையார் என்றழைத்தனர். இவர்கள் ஊரில் தலைவரி அல்லது சோலைவரி, வாகனமான மாட்டுவண்டி, ஒற்றை மாட்டுவண்டி, இரட்டை மாட்டுவண்டி ஆகியவற்றுக்கும் வரியை அறவிட்டு வன்னிமை களிடம் ஒப்படைப்பர்.

இருபதாம் நூற்றாண்டின் ஐம்பதுகள் வரை பெரிய பண நோட்டுகளைக் காணமுடியாது. பணம் எனும் போது செப்பு நாணயங்கள் தான் காணப்படும். இவை ஒரு சதம், ஐந்துசதம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்துச் சதம் (சிறிய வெள்ளிக் காசு), அரைச்சதம், காற்சதம் என்பன புழக்கத்தில் இருந்தன. அரைச்சதத்தை சல்லி என்றும், காற்சதத்தை அரைச் சல்லி என்றும் ஒன்றரைச் சதத்தை ஒரு துட்டு என்றும், ஆறேகாற்சதத்தை ஒரு பணம் என்றும இருபத்தைந்து சதத்தை நாலுபணம் என்றும், ஐம்பது சதத்தை எட்டுப்பணம் அல்லது ஒரு சிலின் என்றும், ஒரு பத்து ரூபாவை ஒரு பவுண் என்றும் அழைப்பர். மக்கள் வரி என்று கட்டும் போது ஒரு சதம் அல்லது இரண்டு சதம்தான் பெரும்பாலான வரியாகும். இச்சதங்களைக் கூட செலுத்த முடியாது வீடுவாசல் களை இழந்தவர்களும் இருந்தார்கள். கல்முனையில் இவ்வாறு இருக்கவில்லை. இவ்வரிகளை செல்வந்தர்களான போடிமார் செலுத்தி விடுவர். ஊரின் மானம் போகக் கூடாது என்பதற்காக வாகும்.

வன்னிமைகள் சிவில் நிருவாகத்திற்குப் பொறுப்பாக விருப்பர். கொலை சம்பந்தமான நடவடிக்கைகள் பொலிஸார் மூலம் மட்டக்களப்பு நீதி மன்றத்திற்கு கொண்டு செல்லப்படும். சிறைச்சாலையும் அங்குதான் இருந்தது. சகல அரசாங்க அலுவல்களுக்கும் அங்குதான் செல்ல வேண்டும். கல்முனை யில் கிராமக்கோடு மட்டும் இருந்தது. அதில் நீதிபதியாயிருப்ப வர் வழக்கை விசாரித்து சிறிய தண்டப்பணம் அறவிடுவார். சில குற்றங்களுக்கு பிரம்படி தண்டனையாகக் கொடுப்பார்.

கல்முனையில் அன்றிலிருந்து இன்றுவரை கோஷ்டி மோதல் கொலைகள் தவிர தனிப்பட்ட கோபதாபக் கொலைகள் நிகழவில்லை. சில கொலைகள் தற்செயலாக நிகழ்ந்தவை. அதாவது, தவறுதலாக நடந்தவையே. கொலை சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் தவிர வேறு பிரச்சினைகளுக்காக மக்கள் வெளியே நீதி தேடிச் செல்லவில்லை. மக்களிடையே ஒற்றுமை மிகைத்து நின்றது.

இந்நிலை இருபதாம் நூற்றாண்டு ஆறாம் தசாப்தத்தில் தளர்ச்சி காணத்தொடங்கியது. அரசியல் சமயத் துறையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்பட்ட நவீன வெளிநாட்டு இயக்கங்கள் முதலாளித்துவ வர்க்கத்தின் வளர்ச்சி நவீன பழக்கவழக்கங்கள் என்பன இளைய பரம்பரையைத் திசைமாற்றி விட்டன. இருந்தும் இதன் வளர்ச்சி வேகம் குறைவாகவே காணப்படுகின்றது. இப்பிரதேசத்தின் நல்ல நிலைமையைப் பேணுவதில் கரிசனை சகலருக்கும் இருந்து வருகின்றது.

நிருவாகத்துறையில் வன்னிமைகள் முறை மாறி பிரிவுக் காரியதிகாரி, உதவி அரசாங்க அதிபர், பிரதேச செயலகச் செயலாளர் எனப் படிப்படியாக மாற்றங்காணப்பட்டுள்ளது. கிராமத் தலைவர் முறை மாறி கிராம சேவகர் முறைவந்துள் ளது. இவர்களை விட வேறு ஒருவர் இருந்துள்ளார். அவரை தோம்புதோர் என அழைப்பர். இவர் கிராமத்தின் மக்கள் இறப்புப் பிறப்பைப் பதிவு செய்யும் பதிவுகாரராவார். இவரே விவாகப் பதிவுகாரராகவும் இருப்பார். இவர்களை விட மற்றொரு வர் முஸ்லிம் விவாகப் பிணக்குகளை விசாரித்து தீர்ப்பவர் இருந்தார். அவரை "காழி" என்றழைப்பர்.

மேற்குறிப்பிட்ட அதிகாரிகள் இருந்தபோதும் சென்ற ஐம்பதுகளின் முன் மக்களை நெறிப்படுத்துவதிலும் சமாதானத்தை நிலை நிறுத்துவதிலும் பள்ளி நிருவாகிகளின் பங்கு தலையாயது. அப்போதெல்லாம் இம்மக்களிடையே சௌஜன்ய நிலையும் சந்தோஷமான சூழ்நிலையும் காணப்பட்டது. அயலவர்கள் மிக நெருங்கிய உறவினர்கள் போல் கவனிக்கப் பட்டனர். தனிதனி வீடுகளில் மக்கள் இருந்தபோதிலும் ஊர் முழுவதும் ஒரு குடும்பமாகக் காணப்பட்டது. ஒருவரைப் பற்றி அறிய விரும்பினால் இவ்வூரிலுள்ள ஒருவரைக் கேட்டால் போதும் அவரைப் பற்றிய பூரண விபரம் தந்து அவர் இருக்கு மிடமும் காட்டிக் கொடுப்பர். சிறந்த மனிதப் பண்புகள் நிறைந்து காணப்பட்டது. இன்று பக்கத்திலுள்ள வீட்டாரைக்கூட அறியாத வர்களாவே விளங்குகின்றனர்.

**உதவி அரசாங்க அதிபர் காரியாலயம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரித்தானியரின் கடைசிக் காலத்தில் நிருவாகப் பரவலாக்கம் ஒன்று நிகழ்த்தப்பட்டது. மாகாணத்தலைநகர்களில் இருந்த கச்சேரி முறையில் உபகச்சேரிகள் அல்லது உதவி அரசாங்க அதிபர் காரியாலயங்கள் ஏற்படுத்தப்பட்டன. கிழக்கு மாகாணத்தலைநகரான மட்டக்களப்பிலிருந்த கச்சேரிமுறையில் பரவலாக்கம் மாவட்ட தலைநகர்களான கல்முனை, திருகோணமலை என்ற இடங்களில் உப கச்சேரிகள் ஆரம்பிக்கப் பட்டன. இவற்றில் உதவி அரசாங்க அதிபர்கள் கடமையாற்றினர்.

இக்கருமபீடங்கள் 1942ம் ஆண்டில் மேற்படி இடங்களில் செயல்பட்டன. கல்முனையில் இருந்த உபகச்சேரியில் அறிஞர் ஏ.எம். அஸீஸ் அவர்கள் உதவி அரசாங்க அதிபராகக் கடமையாற்றினார். இவர் காணியற்ற மக்களுக்கு உத்தரவுப் பத்திரங்கள் மூலம் காணிகள் வழங்கினார். இக்காலத்தில் கொண்டவட்டவான் போன்ற இடங்களில் குளங்கள் அமைத்து மேட்டு நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதிகள் செய்தார். 1941ஆம் ஆண்டில் இருந்து 2ம் உலக மகாயுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்தமையால் மக்கள் பசிப்பணியற்று வாழ உணவுப்பங்கீட்டு முறையை அமுல்நடத்தினார் இவரது காலத்தில் கூட்டுறவு ஐக்கிய பண்டகசாலை சங்கங்களை ஏற்படுத்தி அவற்றின் மூலம் அரிசி கோதுமை மா என்பன குறைந்த விலையில் மக்கள் பெற வசதியளிக்கப்பட்டது. இதே போன்று உடைகளுக்கான துணிகளும் விநியோகிக்கப்பட்டன. இவற்றை இலகுவாகப் பெற்றுக் கொள்ள கூப்பன் (பங்கீட்டு முத்திரை) முறை அமுல் நடத்தப்பட்டது. சகல கிராமங்களும் கூட்டுறவுப் பண்டகசாலைகளைப் பெற்றிருந்தன. இக்கூட்டுறவு முதன்முதலில் அமுல்நடாத்தப்பட்ட காலமும் இதுவே ஆகும். முக்கியமாக வெளிநாட்டுப் பொருட்களே பங்கீட்டு முறையில் மக்களுக்கு விநியோகப்பட்டன.

கல்முனையிலிருந்த உப கச்சேரி தனியார் கட்டிடத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லேயே இயங்கியது. இக்கட்டிடம் கல்முனை சவக்காலை வீதியிலிருக்கும் இமாம் மாவத்தை என்றழைக்கப்படும் வீட்டில் செயல்பட்டது. உதவி அரசாங்க அதிபருக்கும் உத்தியோக வாசஸ்தலம் இருக்க வில்லை. இதனால் ஜனாப். அஸீஸ் அவர்கள் கல்முனை வைத்தியசாலைக்கு அண்மையில் வாழ்ந்த பிரபல முஸ்லிம் குடும்பம் ஒன்றுடன் தங்கி வாழ்ந்தார். இங்கு இரு வசதியான வீடுகள் காணப்பட்டன. அதில் ஒரு வீட்டில் அவர் வாழ்ந்ததாகக் கூறப்பட்டது. இவர் யாப்பாணத்தைச் சேர்ந்தவர். கல்வி கேள்விகளில் சிறந்தவராகவும், சிறந்த சமூக சேவையாள ராகவும் மிளிர்ந்தார்.

கல்முனை மிகப்பழமையான நகரம் கிழக்கு மாகாணத்தின் தென்பகுதியில் பிரபலம் பெற்றுத் திகழ்ந்த இந்நகரம் அக்காலத்தில் இப் பிராந்தியத்திற்கு தலைமை வகித்தது. தற்போது இம்மாவட்டத்தின் தலைநகராகவிருக்கும் அம்பாறை அப்போது வனவிலங்குகள் வாழும் காடாகக் காணப்பட்டது. இந்நாடு சுதந்திரம் பெற்ற பின் இங்கினியாகலை எனும் இடத்தில் கல்லோயாத்திட்டம் ஆரம்பிக்கப் பட்டது. அதனடியாக ஏற்பட்ட குடியேற்றத்திட்டங்கள் அம்பாறைப் பிரதேசங்களில் நிகழ்ந்தன. இது 1951ம் ஆண்டின் பின் நிகழ்ந்த தாகும். இதற்குமுன் அக்காலை புகழ் பெற்று விளங்கிய கல்முனை நகரமே நிருவாக நகராகவிருந்தது. இவ்வாறு புகழ் பெற்ற கல்முனையில் தற்போது மாவட்டக் கச்சேரி அமைந்திருக்க வேண்டும். ஆனால் பேரினவாதிகள் அம்பாறையை தலைநகராக்கி கச்சேரியையும் அங்கு அமைத்தனர். இருந்தும் கல்முனையின் முக்கியத்துவம் குறைந்துவிடவில்லை. அது ஓர் வர்த்தகமையமாக என்றும்போல் இன்றும் திகழ்கின்றது.

**கரையோர மாவட்டம்**

இந்நாட்டில் தேசிய ரீதியாக மூன்று இனங்கள் வாழ்கின் றன. இவை 25 மாவட்டங்களில் செறிவாகக் காணப்படுகின்றன. இனரீதியாக 19 மாவட்டங்களில் சிங்கள இனமும், 6 மாவட்டங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களில் தமிழ் இன்னும் வாய்ப்பு வசதிகளைக் கொண்டு வாழ்கின் றன. முஸ்லிம்களுக்கு 2 மாவட்டங்கள் இனரீதியான பகிர்வில் கிடைத்திருக்க வேண்டும். ஆனால் ஒரு மாவட்டந்தானும் இல்லாது ஒறுக்கப்பட்டுள்ளனர்.

முஸ்லிம்கள் இந்நாட்டில் செறிவாக வாழாமல் பரந்து வாழ்கின்றனர். எனினும் அம்பாறை மாவட்டத்தில் செறிவாகக் காணப்படுகின்றனர். இங்கு குடித்தொகையில் முஸ்லிம்களும் சிங்களவர்களும் சமமாகவும், தமிழர்கள் குறைந்த தொகையினரா கவும் உள்ளனர். இவ்வமைப்பில் சிங்களவர் மாவட்டத் தலைமைப் பொறுப்பை ஏற்றுள்ளனர். கடந்த 80களில் இவர்கள் தொகை முஸ்லிம்களைவிட குறைவாக இருந்தது. இச்சூழ்நிலை யில் அம்பாறை தலைமைப் பொறுப்பு முஸ்லிம்களுக்கு கிடைத் திருக்க வேண்டும். ஆனால், பேரினவாதத்தின் இனநசுக்கல் கொள்கை காரணமாக முஸ்லிம்கள் அம்பாறை மாட்டத் தலைமைப் பொறுப்பை இழந்துள்ளனர்.

இன நசுக்கல் அல்லது இனத்துடைப்புக் கொள்கையால் முஸ்லிம்கள் அம்பாறை பெரும் பிரதேசத்தில் மாவட்ட ரீதியான பல நன்மைகளை இழந்து வருகின்றனர். இவ்விழப்பீடுகளில் முதன்மையாகக் காணப்படுவன.

1. முஸ்லிம் அரசாங்க அதிபர் இல்லாமை.
2. மாவட்ட ரீதியான அரச ஒதுக்கீடுகள் முஸ்லிம்களுக்குக் கிடைக்காமை.
3. அம்பாறை மாவட்டத்துள் முஸ்லிம்கள் காணிகளை இழந்தமை.
4. முஸ்லிம்கள் தங்கள் சொந்த மாவட்டத்துக்குள்ளே காணிகள், வீடுகள் வாங்கும் உரிமையை இழந்துள்ளமை.
5. இம்மாவட்டத்தில் அரச தொழில்களை முஸ்லிம்கள் பெற முடியாமை.
6. மாவட்ட ரீதியான பாராளுமன்ற உறுப்பினர்களுக்குரிய அபிவிருத்தி நிதியில் குறைவேற்பட்டு வருகின்றமை.
7. முஸ்லிம்கள் வர்த்தக ரீதியாக ஒறுக்கப்பட்டு வருகின்றமை.
8. நஷ்டஈடுகள், நிவாரணங்கள் சரியாகக் கிடைக்காமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. ஆயுதப் படைகளில் முஸ்லிம்கள் வெகுவாகக் குறைக்கப் பட்டுள்ளமை.
10. மொழிப் பிரச்சினையால் அரச காரியங்கள் தடைப்பட்டமை.

இதே போன்ற இன்னும் பல இன்னல்களை இம்மாவட்ட முஸ்லிம்கள் அனுபவித்து வருகின்றனர். இவற்றையெல்லாம் கூட்டு மொத்தமாக கவனிக்கும் போது முஸ்லிம்களுக்கு ஓர் தனி மாவட்டம் தேவை என்பது தெளிவாகின்றது. அது கரையோர மாவட்டமாக இருக்கலாம். அல்லது வேறு பெயர் கொண்டதாக இருக்கலாம். தேவை முஸ்லிம்களுக்கோர் மாவட்டம்.

இம்மாவட்டக் கோரிக்கைக்குத் தடைகளாக பலவற்றை எம்மில் சிலர் முன்வைக்கின்றனர். அவை

1. விவசாயத்திற்குரிய நீர் தடைப்படல்.
2. மின்சாரம் தடைப்படல்.
3. போக்குவரத்துச் செய்ய முடியாமை.

என்பனவற்றைக் குறிப்பிடலாம். இவற்றிற்கான ஒரே பதில் முஸ்லிம்கள் தனிநாடு கோரவில்லை. கேட்பது இலங்கை அரசின் இறைமையின் கீழ் ஓர் சிறு மாவட்டம் மட்டுமே. தனிநாடு கோருவேருக்கும் இவ்வசதிகள் அளிக்கப்பட்டு வருவதை இன்று நாம் காண்கின்றோம்.

எனவே, அம்பாறை மாவட்டத்தின் மறு பிரிவாக இம்மாவட்டம் அமைவதில் எந்தவோர் இனத்திற்கும் நஷ்டமில்லை. முஸ்லிம் கள் சுயமரியாதையோடு இந்நாட்டில் வாழவும், பிறர் தலையீடின்றி தங்கள் தங்கள் காரியங்களைத் தீர்மானித்து செயல்படவுமே இம்மாவட்டக் கோரிக்கை முன்வைக்கப்படுகிறதென்பதை நாம் உணர்ந்தால் வெற்றி நிச்சயம்.

தொடரும்...




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





நகரமண்டபம்


வாடிவீடு



தொலைபேசி



பஸ்தரிப்பிடம்




பஸ் நிலையம்




நூலகம்



வங்கிகள்



சந்தை




ஒற்றுமைச் சதுக்கம்



கூட்டுறவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org